பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 | வள்ளுவர் ஆண்டு 2056 | ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை | 14.11.2025 | கதிர் 006

## இனி அது ரகசியம் அல்ல!

ரெலோவின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் காலைக்கதிர் பத்திரிகையை மஞ்சள் பத்திரிகை என்று கூறியிருக்கிறார். ‘டிஜிட்டல்’ வடிவில் வரும் காலைக்கதிர் அவருக்கு மச்சளாகத் தெரிந்தால் அதற்கு அவரது அலைபேசித் திரையில் (மொபைல் ஸ்கிரீனில்) ஏதாவது தவறு இருக்கும் என்று நினைக்கின்றேன். ஏனெனில் பத்திரிகையில் வருவதில் எது செய்தி, எது கட்டுரை, எது பத்தி எழுத்து, எது எழுத்தாக்கம் என்று பிரித்தறிய முடியாத அவரால் பத்திரிகையின் உள்ளடக்கத்தையொட்டி இந்தப் பத்திரிகையை மஞ்சள் பத்திரிகை என்று பகுத்தறிந்திருக்க முடியாது ☞2

# மாகாணத் தேர்தல் பற்றி ஆராய நாடாளுமன்றக் குழு அமைக்குக

## எதிர்க் கட்சிப் பிரதமர கொறடா வலியுறுத்து

மாகாணசபைதேர்தலைநடத்துவதாகஅரசுத் தலைவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை விரைவாக நிறைவேற்றுவதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதனால் தேர்தலை தொடர்பில் கலந்துரையாட பிரதமர் தலைமையில் குழுவொன்றை அமைக்குமாறு சபாநாயரை கேட்டுக்கொள்கிறோமென எதிர்க்கட்சிகளின் பிரதமகொறடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்ட உரை மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தலை ஒரு வருடத்துக்குள் நடத்துவதாகவே அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் அரசுத் தலைவர் தெரிவித்திருந்தார். வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கும்போது, மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்தப்போகிறீர்கள் என எமது கட்சியின் பொதுச் செயலாளர் அரசுத் தலைவரிடம் கேட்டபோது, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக 10 பில்லியன் ஒதுக்கி இருக்கிறேன். தேர்தலை நடத்தும் நாளை என்னால் தீர்மானிக்க முடியாது. நாடாளுமன்றத்தில் இருக்கும் அனைவரும் இணைந்து அதற்குச் சட்டம் ஒன்றை அனுமதித்து தர வேண்டும் என்று கேட்டிருந்தார்.

அதனால் மாகாணசபை தேர்தலை நடத்துவது தொடர்பில் கட்சித்தலைவர்களுடன் கலந்துரையாடி, பிரதமரின் தலைமையில் குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயரைக் கேட்டுக்கொள்கிறோம். ☞2

## சிவப்பு சீனி உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை

### அமைச்சர் ஹந்துநெத்தி தெரிவிப்பு

‘சிவப்புச் சீனியின் தந்தை’ என்று என்னை குறிப்பிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். தேசிய உற்பத்திகளை மேம்படுத்துதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிறு, மத்திய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்க 80 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று கைத்தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத்தலைவரால் முன்வைக்கப்பட்ட 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் குறித்து எதிர்க்கட்சியினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் ஏதும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இதைப் பற்றி எதிர்க்கட்சியினர் எவரும் பேசுவதில்லை.

சர்வதேச நாணய நிதியம் ☞6

## முடிந்தால் மாகாணத் தேர்தலை நடத்திக் காட்டுங்கள் பார்க்கலாம்

### ஐக்கிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிற்குச் சவால்

வரவு, செலவு திட்டத்தில் அரச துறை, தனியார்துறையினருக்கு எந்த நன்மையும் இல்லை. அதனால் மக்கள் ஆளும்தரப்புக்குப் பதிலளிக்க மாகாணசபை தேர்தலை எதிர்பார்த்து இருக்கிறார்கள். முடிந்தால் தேர்தலை நடத்துமாறு ஆளும்தரப்பிற்கு சவால் விடுகிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்ட உரை மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அபிவிருத்தியைத் தடை செய்து இந்த நாட்டில் ஊழல் மோசடிகளில் யாராவது ஈடுபட்டிருந்தால், ☞6

## வடக்கு தாதியர் பிரச்சினைக்கு முரண்பாடற்ற தீர்வு கிடைக்கும்

### சுகாதார அமைச்சர் அறிவிப்பு

வடக்கு மாகாண தாதியர் உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளோம். முரண்பாடற்ற தீர்வு வழங்கப்படும் என்று சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். ☞6

## மாவீரர் துயிலும் இல்லங்களை தமிழர்களிடம் கையளியுங்கள்

### கோடீஸ்வரன் எம்.பி. ஆளும்தரப்பிடம் கோரிக்கை

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சகல மாவீரர் துயிலும் இல்லங்களையும் அங்குள்ள மக்களிடம் கையளித்து, அந்த இடங்களை அங்கீகரிக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு அவை மக்களிடம் கையளிக்கப்படும் பட்சத்தில் அவற்றை பராமரிக்கும் செலவை தமிழர்களாகிய நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ☞2

## இணைய வழிக் கடன் மாபியா மீது தீர ஆராய்ந்து நடவடிக்கை எடுங்கள்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை

பல உயிர்களைப் பலி கொடுக்கும் முன், இணையவழி கடன் மாபியா தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச அரசிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து ☞6

## சாத்தியமான வாக்குறுதிகளைக்கூட அநுர தரப்பு நிறைவேற்றவில்லை

### பிரான்ஸ் தூதரிடம் சுமந்திரன் இடித்துரைப்பு



அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு அரசுத் தலைவர் மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் நடைமுறைச்சாத்தியமானவற்றைக்கூட இன்னமும் நிறைவேற்றவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். நேற்று தன்னைச் ☞2

## ‘எனக்கு நீதி வழங்குங்கள்’ செல்வம் எம்.பி. மன்றாட்டு

### தன்னைப் பற்றி தவறான செய்தி வெளியிடப்படுகிறதாம்

இணையவழி ஊடக வாயிலாகவும், போலியான முகநூல் கணக்கினூடாகவும், யூடியுப் ஊடாவும் சட்டத்தை கையில் எடுத்து என்னைப் பற்றித் தவறான செய்தியை வெளியிடுவது எனக்கு பாரதூரமான களங்கத்தை ஏற்படுத்துகிறது. உண்மையற்ற, ஆதாரமற்ற பொய்யான இச்செய்திகளை வேண்டுமென்றே பரப்பும் இவ்வாறான செயல் எனது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும், அவமதிக்கும் நடவடிக்கையாக உள்ளதால் இது தொடர்பில் கவனத்தில் எடுத்து எனக்கு நீதி வழங்க வேண்டுமென தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வன்னி ☞6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

அதற்குக் காரணம் என்னவென்றால், தன்னைக்கைது செய்யப்போவதாக காலைக் கதிர் பத்திரிகை 'செய்தி' வெளியிட்டது என்று அவர் தனது உரையில் தெரிவித்திருக்கிறார். 'காலைக்கதிர் எனும் இணையவழி மஞ்சள் ஊடகம் 11-11-2025 வெளியிட்ட வெளியீட்டில் எனது பெயரைக் குறிப்பிட்டு நான்கைது செய்யப்படுவது உறுதிஎனசெய்தி வெளிட்டுள்ளனர்' என்று அவரது உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலைக்கதிர் அப்படி எந்தவொரு செய்தியையும் இதுவரையில் பிரசுரிக்கவில்லை என்பதை அடித்துச் சொல்கின்றேன்.

இந்த அரசியல் பத்தியில்தான் அத்தகைய சாரப்பட ஒரு தகவல் பகிரப்பட்டிருந்தது. அதில் 'விரைவில் அவர் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன' என்றே தெரிவிக்கப்பட்டிருந்தது. செல்வம் அடைக்கலநாதன் தனது உரையில் குறிப்பிட்டதுபோலகைதுசெய்யப்படுவதுஉறுதி என்றுஎங்கும்தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. 'கைது செய்யப்படுவது உறுதி' என்பதற்கும் 'கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்' என்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை கருத்தூன்றி வாசிக்கத் தெரிந்தவர்களால் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

செல்வத்தாரிடம் அந்தத் திறன் இருக்கவில்லை என்பது அவரது நாடாளுமன்ற உரையிலேயே நன்கு தெரிகிறது. இனிமேலாவது அவர் எழுதப்படும் விடயங்களைக் கருத்தூன்றி ஒன்றுக்கு மூன்று முறை நன்கு கருத்தூன்றி வாசிக்க முயற்சியாவது செய்துவிட்டு உரையாற்றுவது சிறப்பு. இல்லையேல்கடந்ததலைமைக்குழுக் கூட்டத்தில் 'நான் கோபத்தில அவசரப்பட்டுக் கதைத்துவிட்டேன்' என்று சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லவேண்டியிருக்கும் என்பதையும்நினைவுபடுத்தவிரும்புகின்றேன். எல்லாவற்றுக்கும் முதலில் செய்தி எது ஏனைய விடயதானங்கள் எவை என்பதைப் பற்றியும் யாரிடமாவது கேட்டறிந்துகொண்டு, கொஞ்சமாவது புத்திக் கூர்மையுடன் செயற்படுவதும் நல்லது.

சுரேஸின் இறப்புத் தொடர்பிலும் அதற்கு முன்பாகஅவருக்குமிரட்டல்விடுக்கப்பட்டமை தொடர்பிலும் கைது இடம்பெறுகின்ற திசையை நோக்கி நகர்வுகள் செல்கின்றன என்பதை எனது செய்தி மூலங்களில் இருந்து உறுதிப்படுத்திக்கொண்டே அந்தத் தகவலை நான் இங்கு பகிர்ந்திருந்தேன் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

இதில் மற்றொரு வேடிக்கை என்னவென்றால், காலைக்கதிர் பத்திரிகை ரெலோவின் வவுனியா தலைமைக் குழுக் கூட்டத்தில் நடந்த விவரங்களையெல்லாம் செய்தியாக வெளியிட்டிருந்தது. அதிலெல்லாம் தவறு இருப்பதாக செல்வம் அடைக்கலநாதன் ஒரு வரி கூடக் குறிப்பிடவில்லை. தன்னைக் கைது செய்வது உறுதி என்று காலைக்கதிர் சொன்னதாக அவர் நம்பிக்கொண்டது பற்றித்தான் உரையாற்றியிருக்கிறார். அதன் மூலம் தலைமைக் குழுக் கூட்டத்தில் நடந்தவைகள் பற்றிய செய்திகள் அனைத்தும் உண்மையான தகவல்கள் என்று அவர் மறைமுகமாக ஏற்றுக்கொண்ட பெருந்தன்மைக்கு அவருக்கு ஒரு நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

.............................................

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மாலை 6 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நவம்பர் 7 நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். அரசுத் தலைவரின் வரவு செலவு திட்ட உரை 4 மணித்தியாலங்களும் 15 நிமிடங்கள் வரையும் நீடித்திருந்தது.

இந்த வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8 தொடங்கி 6ஆவது நாளாக இன்று வெள்ளிக்கிழமை மாலை வரை இடம்பெறுகிறது. இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இந்த வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாகவா எதிராகவா வாக்களிப்பது என்பது தொடர்பில் எதிர்க்கட்சிகள் தனித்தனியாக கூடி ஆராய்ந்துள்ளன.

அதேவேளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள், மலையகக் கட்சிகள் இன்னும் இறுதி நிலைப்பாட்டை எடுக்கவில்லையெனக் கூறப்படுகின்றது. என்றாலும் வரவு செலவு திட்டத்தில் இந்தமுறை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதை மலையக கட்சிகள் விவாதத்தில் ஆதரவளித்து உரையாற்றி இருந்தன. அதனால் அவர்கள் வாக்களிப்பில் எவ்வாறான தீர்மானத்தை எடுக்கப்போகிறார்கள் என்பது அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, தமிழ் அரசுக் கட்சி நேற்று 'சூம்' செயலி ஊடாக இது தொடர்பில் ஆராய்ந்தது. இதற்கு முன்னர் வவுனியாவில் நடந்த கூட்டத்திலும் இது தொடர்பில் ஆராயப்பட்டது, அப்போது நடுநிலை வகிக்கவேண்டும் எதிர்க்கவேண்டும் என்ற இரு நிலைப்பாடுகளும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அதனால் நேற்றைய கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. நேற்று கட்சியின் அரசியல் குழு 'சூம்' ஊடாகக் கூடியபோது அதில் இடம்பெற்றிராத நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். இரு தரப்பினரும் கூடி ஆராய்ந்த நிலையிலும் தீர்க்கமான இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

இனப் பிரச்சினை தொடர்பான அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தரும்படி கேட்டுத் தமிழ் அரசுக் கட்சி எழுதிய கடிதத்திற்கு அரசுத் தலைவரிடமிருந்து பதில் வரும் அறிகுறிகள் இருப்பதால் கடைசி நேரம் வரையில் இறுதி முடிவைத் தள்ளி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் தந்தையாரின் இறுதிச் சடங்கிற்கு வந்திருந்த அரசுத் தலைவர் அநுரகுமாரசுமந்திரனின்கைகளைப்பிடித்தபடி அவருடன் பேசியபோது இது தொடர்பாகவும் சுமந்திரன் அவரிடம் கேள்வி எழுப்பியிருந்தார். கட்சி சார்பில் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு ஒரு மாதமாகியும் பதில் கிடைக்கவில்லை என்பதைச் சுமந்திரன் சுட்டிக்காட்டியபோது, வரவு செலவுத் திட்டப் பணிகளின் தீவிரம் குறைந்ததும் சந்திப்போம் என்று பதில் அனுப்பும்படி தான் பணித்திருந்தார் என்று அநுர தெரிவித்தார். அப்படிப்பட்ட பதில் எதுவும் கிடைக்கவில்லை என்று சுமந்திரன் பதிலளித்திருந்தார்.

உடனடியாகப் பதில் அனுப்பும்படி தான் பணிப்பார் என்று அப்போது அநுர வாக்குறுதியளித்திருந்தார். அந்தப் பதில் இன்று நாடாளுமன்றத்தில், வரவு செலவுத் திட்டத்தின் மீதான வாக்களிப்பு நடப்பதற்கு முன்பாக நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனிடம் கையளிக்கப்படக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் காட்டப்பட்டதன் விளைவாக நேற்றைய கூட்டத்தில் தமிழ் அரசு கட்சி வாக்களிப்பில் என்ன முடிவை எடுப்பது என்பது தீர்மானிக்கப்படவில்லை. ஒருவேளை அரசுத் தலைவரின் பதில் கிடைத்தால், இரு தரப்புப் பேச்சுக்கு நேரம் ஒதுக்கப்பட்டால் தமிழ் அரசுக் கட்சி கடந்த ஆண்டில் செய்ததைப் போலவே இந்த வரவு செலவுத் திட்டத்திலும் வாக்களிக்காமல் ஒதுங்கிப் போகும். கடிதம் கிடைக்கவில்லை என்றால் எதிர்த்து வாக்களிப்பதா இல்லையா என்பதை நாடாளுமன்றக் குழு முடிவு செய்யவேண்டியிருக்கும். அப்படி ஒரு நிலமை வந்தால் சிலர் ஒதுங்கியிருக்க சிலர் எதிர்த்து வாக்களிக்கும் நிலமையும் ஏற்படும் என்று தெரிகிறது. எப்படியிருப்பினும் அரசுத் தலைவரின் கடிதம் இன்று கிடைக்கும் என்று நம்பப்படுகின்றது.

ஒருவேளை அப்படியே அரசுத் தலைவரின் கடிதம் கிடைத்தாலும் அது இந்த வரவு செலவுத் திட்டத்திலும் தமிழ் அரசுக் கட்சி எதிர்த்து வாக்களிக்காமல் இருப்பதற்கான ஆளும்தரப்பின் உத்தியாகக் கணிக்கப்படவேண்டுமேயன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஆளும்தரப்பின் அர்ப்பணிப்பின் வெளிப்பாடு என்று கருத முடியாது.

என்பிபி ஆளும்தரப்பை ஆட்டுவிக்கும் முழுச் சாவியும் பெலவத்தையில் ரில்வின் சில்வாவின் கைகளில் இருக்கும் நிலையில் அரசுத்தலைவருடன்நடத்தப்படும்எந்தவொரு பேச்சும் வெறும் கண்துடைப்பு அல்லது காலம் கடத்தல் மட்டுமே என்று நிச்சயம் சொல்ல முடியும். இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஆளும்தரப்பு தங்களுக்குள் பேசி ஒரு முடிவை வெளிப்படுத்தாத வரையில் தமிழ்த் தரப்புக்களுடனான அதன் பேச்சுக்கள் எவையும் வெறுமனே கருத்துக் கேட்புக்களாக மட்டுமே முடியும் என்று தகவல் அறிந்த நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையே, இன்று வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது குறித்து ஆராய ரெலோ கட்சியின் தலைமைக் குழுவும் 'சூம்' செயலி மூலம் கூடுகின்றது. இந்தக் கூட்டத்தில் இது தவிர வேறு விடயங்களும் ஆராயப்படும் என்று தலைமைக் குழு உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர். வவுனியாவில் நடந்த கடந்த கூட்டத்தில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மீதான பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராயப்பட்ட நிலையில், அவர் மீதான குற்றச்சாட்டுக்களை அடுத்து அவரை ஒதுக்கி வைத்துவிட்டு கட்சியின் உபதலைவர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் கட்சியின் பேராளர் மாநாட்டைக் கூட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால், அது தொடர்பில் கட்சியின் பேச்சாளர் அன்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பிலும் நாடாளுமன்றத்தில் செல்வம் அடைக்கலநாதன் நேற்றுத் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பிலும் ஆராயப்படும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வருடத்தில் மாகாணசபை தேர்தலை நடத்துவதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எமது முழு ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம். அதனால் பழைய முறையிலாவது தேர்தலை நடத்தி, மாகாண சபையை அமைப்பதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குவோம்.

மேலும் அரசுத் தலைவர் அநுரகுமார அடுத்த வருடத்துக்காக முன்வைத்திருக்கும் வரவு செலவு திட்டம், கார்னிவேல் விழாவில் பாதளக் கிணற்றில் ஓடும் மோட்டார் சைக்கிளைப்போன்றதகும். அது பெரும் சத்தத்துடன் எத்தனை சுற்றுக்கள் ஓடினாலும் இறுதியில் ஒரு இடத்திலேயே இருக்கிறது. அதேபோன்றே அரசுத் தலைவர் நான்கரை மணி நேரம் வரை பெரிய சத்தத்துடன் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்தாலும் ஒரே இடத்தில் சுற்றிக்கொண்டு இருப்பதாகவே மக்கள் கதைக்கின்றனர்.

நாட்டை ஆட்சிசெய்த பல ஆளும்தரப்புக்கள் வரவு செலவு திட்டத்தில் முவைக்கப்படும் முன்மொழிவுகளில் பலவற்றைச் செயற்படுத்தி இருக்கின்றன. ஒருசில விடயங்கள் செயற்படுத்த முடியாமல் போயிருக்கும். ஆனால் இந்த ஆளும்தரப்பு 2025ஆம் ஆண்டுக்காக முன்வைத்த வரவு ,செலவு திட்டத்தின் மூலதனச் செலவில் நூற்றுக்கு 60 வீதத்துக்கு அதிகம் ஆளும்தரப்பால் செலவிட முடியாமல் போயிருக்கிறது. 2025 வரவு செலவு திட்டத்தில் 54 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதில் நூற்றுக்கு16 முன்மொழிவுகளின் முன்னேற்றம் நூற்றுக்கு 25 வீத்துக்கும் குறைவாகும். ஆளும்தரப்பின் இயலாமைமையை இதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

கடந்த வருடம் முன்வைத்த வரவு செலவுத் திட்டத்தின் சில பிரேரணைகள் இந்தமுறை வரவு, செலவு திட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆளும்தரப்பிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தும் இவற்றைச் செயற்படுத்த முடியாமல் போயிருக்கிறது. அதனால் இந்தமுறை சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளிலும் அதிகமான விடயங்களை அடுத்த வருடத்தில் சமர்ப்பிக்கும் வரவு செலவு திட்டத்திலும் சேர்த்துக்கொள்ளும் என்பதில் சந்தேகம் இல்லை.

அரசுத்தலைவர் அடிக்கடி தெரிவித்துவரும் விடயம்தான், எதிர்கால சந்ததியினருக்காக நாட்டின் அனைத்து விடயங்களையும் டிஜிட்டல்மயப்படுத்த நடவடிக்கை எடுக்கிறோம் என்பதாகும். ஆனால் இந்தமுறை வரவு வரவு செலவு திட்டத்தில் அதற்காக 16 பில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனம் கொள்வனவு செய்வதற்காக 12.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஆளும்தரப்பை ஆட்சிக்குக் கொண்டுவரப் பெரும் அர்பணிப்பு செய்தவர்கள்தான் ஆசிரியர்கள். இதற்குக் காரணம், இவர்கள் ஆட்சிக்கு வந்தால் தமது சம்பள முரண்பாட்டை நீக்குவார்கள் என்ற வாக்குறுதி மீதான நம்பிக்கையாகும். அதனால் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை போக்குவதற்கு இந்த வரவு செலவு திட்டத்தில் எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன எனக் கேட்கிறோம்.

மேலும், ஆளும்தரப்பின் கொள்கைப் பிரகடனத்தில், பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாச புத்தகங்களுக்கான வரியை முற்றாக நீக்குவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். ஆனால் ஆளும்தரப்பு இரண்டாவது தடவையாக முன்வைத்துள்ள வரவுசெலவுதிட்டத்திலும் இதனை மேற்கொள்ள முடியாமல் போயிருக்கிறது.

கல்விக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நூற்றுக்கு 6 வீதத்தை ஒதுக்குமாறு தெரிவித்து அன்று மாணவர்களை வீதிக்கிறக்கியவர்களே இன்று ஆட்சியில் இருக்கிறார்கள். இதற்காகப் பாதயாத்திரை சென்ற பிரதமர் உள்ளிட்ட பலர் தற்போது அமைச்சுப் பதவிகளை வகித்து வருகிறார்கள். ஆனால் கல்விக்காக ஒதுக்கிய செலவை தெரிவிப்பதற்கு கவலையாக இருக்கிறது..

வேலையற்ற பட்டதாரிகளை வீதிக்கிறக்கிய இவர்கள், இன்று அந்தப் பட்டதாரிகள் தொழில் கேட்டு வீதிக்கு வரும்போது, வீதிக்கு வராமல் படிக்குமாறு தெரிவிக்கின்றனர். ஆளும்தரப்புத்தங்களை ஆட்சிக்குகொண்டுவர செயற்பட்டவர்களை நிராகரிப்பது குறித்து நாங்கள் கவலையடைகிறோம் - என்றார்.

## சாத்தியமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேசிய இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லெம்பேர்ட் பிரதிதூதுவசர் மத்தியூ ஜோன் ஆகியோரிடமே அவர் இதனைத் வலியுறுத்தினார்.

கொழும்பில் உள்ள சுமந்திரனின் இல்லத்தில் நடைபெற்ற. இந்தச் சந்திப்பில் சுமந்திரன் தூதுவரிடத்தில் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு அரசுத் தலைவர், நாடாளுமன்ற தேர்தல்களில் பல்வேறுவிதமான நடைமுறைச் சாத்தியமான வாக்குறுதிகளை அளித்தார்கள். குறிப்பாக, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல், நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமையை நீக்குதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்குதல் உள்ளிட்ட தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் உள்ளடங்கிய விடயங்களுக்கு நிரந்தரமான தீர்வு காண்பதாகக் கூறினார்கள். ஆனால், அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்று ஆண்டொன்று நிறைவடைந்துள்ளபோதும் இதுவரையில் அந்தவாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான தொடக்க கட்ட நடவடிக்கைகள்கூட முன்னெடுக்கப்படவில்லை.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தினை ஆளும்தரப்பு நிராகத்துள்ளதோடு உள்ளக ரீதியில் பொறிமுறைகள் எவற்றையும் உருவாக்கவில்லை. ஆளும்தரப்பு சர்வதேசத்தின் பொறுப்புக்கூறலுக்கான ஈடுபாட்டையும் ஏற்றுக்கொள்வதற்குத் தாயராகவும் இல்லை.

மேலும் நாட்டில் ஏற்கனவே உருவாக்கப் பட்டுள்ள வலிந்து காணாமலாக்கப்பட் டவர்களைக்கண்டறிவதற்கான அலுவலகத்தின் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உரிய கொடுப்பனவுகள் கூட முறையாக வழங்கப்படவில்லை. இந்தக் கட்டமைப்பை பாதிக்கப்பட்ட மக்கள் நிராகரிக்கின்றார்கள் என்பதற்கு அப்பால், அதனுடைய செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை.

இருப்பினும், ஊழல், மோசடிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் அச்செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெறவேண்டியது அவசியமாகின்றது.

அத்தோடு, மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்ச்சியாக காலம்தாழ்த்தப்பட்டு வருவதோடு பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்காக எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணையை முன்னகர்த்துவதில்கூட ஆளும்தரப்பு ஆர்வம் காண்பிக்கவில்லை என்று தெரிவித்தார்.

இதனைவிடவும், வடக்கு, கிழக்கு நிலமைகள், தமிழ் மக்களின் அபிலாஷைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சுமார் ஒன்றரை மணிநேரம் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. இச்சமயத்தில் பிரான்ஸ் தூதுவர் தமிழ் மக்களின் முதன்மையான

தொடர்ச்சி 6ம் பக்கம்....


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனியாவது முடிவுக்கு வருமா?

இலங்கையின் ஜனநாயகப் பயணம் பல முறை தடுமாறியிருப்பதற்கான முக்கிய காரணங்களில்ஒன்று, பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் நீண்டகாலப் பயன்பாடாகும். தற்காலிகச் சட்டம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சட்டம், பல தசாப்தங்களாக குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பாதித்துச் சென்றது. குறிப்பாகத் தமிழர்கள் மீதான அடக்குமுறைக்கு வழிவகுத்தது. சமீபத்தில், அந்தச் சட்டத்தை ஆய்வு செய்து அதன் நீக்கத்திற்கான பரிந்துரைகளை வழங்கிய குழுவின் அறிக்கை நீதி அமைச்சரிடம் அதிகாரப்பூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. இது ஒரு முக்கிய முன்னேற்றமாக இருந்தாலும், அது உண்மையான மாற்றத்தின் அறிகுறியாக மாற வேண்டுமென பொதுச்சமூகத்தின் எதிர்பார்ப்பு உயர்ந்திருக்கிறது.

### ஆட்சிக்குப் பிறகு மாறிய குரல்கள்

ஆட்சிக்குவருவதற்குமுன், தேசியமக்கள்சக்தி (NPP) தலைமையிலான ஆளும்தரப்பு மிகத் தெளிவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவோம் என்று வாக்குறுதி அளித்தது. அந்த வாக்குறுதி, வடக்கு–கிழக்கில் பல ஆண்டுகளாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சுமையை அனுபவித்த மக்களிடம் நம்பிக்கையை உண்டாக்கியது.

ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் நிலைமையே மாறிவிட்டது.

அரசின் சில முக்கியப் பிரதிநிதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பிரச்சினை இல்லை; அதை பயன்படுத்தும் முறையில்தான் பிரச்சினை ஏற்பட்டதாக வாதிட்டனர். இது அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

சட்டம் ஒரு கருவிதான்; ஆனால் அந்தக் கருவியால் ஏற்பட்ட அநீதி எண்ணிலடங்காதது. அதை மாற்றாமல், ‘பயன்படுத்துபவர்களிலேயே தவறு’ என்று கூறுவது உண்மையான பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திருப்பும் முயற்சியாகவே தோன்றுகிறது.

### சட்ட நீக்கம் ஏன் அவசியம்?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலத்தன்மையே மனித உரிமை மீறலுக்குச் சாத்தியமான வாய்ப்புகளைத் திறந்து வைத்தது. வழக்குகள் இன்றியநீண்டகாலத்தடுப்புக்காவல், குற்றச்சாட்டின்மை, வழக்குரைஞரின் உதவியில்லா நிலமை, நீதிமன்றக் கண்காணிப்புகள் குறைவு, இவை அனைத்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்து விமர்சிக்கக் காரணமாக இருந்தன.

வடக்கு–கிழக்கில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பல ஆண்டுகள் வழக்குகளின்றி சிறையில் வாடினர் என்பதை நாம் மறக்க முடியாது. இன்றும் சிலர் அப்படி வாடுகின்றனர். எனவேதான் அது நீக்கப்படுவது அவசியமாகிறது.

### குழு அறிக்கை போதுமானதல்ல

அரசால் நியமிக்கப்பட்ட குழு, பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கத்திற்கான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. சமூக அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சர்வதேச ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கருத்துக்களையும் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது பாராட்டத்தக்கது.

ஆனால் உண்மையான கேள்வி – அரசு இந்தப் பரிந்துரைகளை நடைமுறைக்கு கொண்டு வருமா? அல்லது இது ஒரு அரசியல் நிகழ்வாக மட்டுமே முடிவடையுமா?

வடக்கு–கிழக்கில் மட்டுமல்லாது நாடு முழுவதும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பாதிப்பை எதிர்கொண்டவர்கள் உண்மையான மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள்.

### உரிமை பாதுகாப்பு வேண்டும்

பயங்கரவாதச் சட்டத்தை நீக்குவது பாதுகாப்பைத் தளர்த்துவதாகப் பொருளல்ல. மாறாக, நவீன உலகின் பாதுகாப்புச் சவால்களை சமாளிக்கும், மனித உரிமைகளை பாதுகாக்கும், நீதிமன்ற கண்காணிப்பை உறுதி செய்யும், ஒரு புதிய சட்டம் தேவையாக இருக்கிறது.

அரசு இதை உண்மையான அரசியல் விருப்பத்துடன் மேற்கொள்ள வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இருந்த குறைகளை மாற்றாமல், அதே ஆவியில் புதிய சட்டம் வந்தால் அது புதிய பெயரில் பழைய அடக்குமுறை மட்டுமே ஆகிவிடும்.

பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் ஒரு சாதாரண சட்ட மாற்றம் அல்ல; அது நாட்டின் ஜனநாயகச் சுவாசத்தைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய கட்டமாகும்.

எனவே அரசு, தேர்தல் கால வாக்குறுதிகளை நினைவில் கொள்ள வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நியாயப்படுத்தும் பழைய வாதங்களிலிருந்து விலக வேண்டும், குழுவின் பரிந்துரைகளை வெளிப்படையாக வெளியிட்டு, சமூக கலந்துரையாடல்களுக்கு திறக்க வேண்டும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் புதிய சட்டத்தை உருவாக்கவேண்டும்.

இவை சாத்தியமானால், பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் உண்மையிலேயே இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய நல்லிணக்க சமிக்ஞையாகமாறும். இல்லையெனில், இதுமேலும்ஒருநிறைவேற்றப்படாத வாக்குறுதியாகவே மாறிவிடும்.

அடக்குமுறை முடிவடைய வேண்டும். உரிமைமிக்க ஜனநாயகம் ஆரம்பிக்க வேண்டும்.

## பெருந்தோட்ட மக்களின் சம்பளம் குறித்து எதிர்க் கட்சித் தலைவரது கருத்து என்ன?

### ஆளும்தரப்பு பதுளை எம்.பி. கோரிக்கை

பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது தவறென்று நாமல் ராஜபக்சவும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் குறிப்பிடுகிறார்கள். இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள். பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தற்றுணிபுடன் அறிவிக்க வேண்டும். எதிர்க்கட்சியின் கீழ்த்தரமான செயற்பட்டுக்கு எதிராக மலையக மக்கள் ஒன்றிணைந்து கடும் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும். மலையக மக்களுக்காக நாங்கள் முன்னிலையாவோமென தேசிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தினிந்து சமன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட கடந்த 200 ஆண்டுகாலமாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். அந்த மக்கள் எனக்கும் வாக்களித்துள்ளார்கள். ஆகவே அவர்களுக்காக முன்னிலையாக வேண்டிய பொறுப்பு எனக்கும் உண்டு. கடின உழைப்பினால் நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் மலையக மக்கள் இன்றும் லயன் அறைகளில் தான் வாழ்கிறார்கள். அவர்களின் வாழ்க்கை ஆரம்பித்த இடத்திலேயே இன்றும் உள்ளது.

மலையகத்தில் லயன் அறையில் தாய், தந்தை என்று ஒரு குடும்பமும், அவர்களின் பிள்ளைகளின் குடும்பமும் வாழ்கின்றன. கண்களை மூடி சற்று சிந்தித்துப் பாருங்கள் எம்மால் அப்படி வாழ முடியுமா என்று? ஒருபோதும் எம்மால் அப்படி வாழ முடியாது. மலையக மக்கள் இன்றும் பெரும் நெருக்கடிகளுக்கும், பின்தள்ளப்பட்ட நிலையிலும்தான் வாழ்கிறார்கள்.

மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற உண்மையான நோக்கம் எமக்கு உண்டு. இது அரசியலுக்கு அப்பாற்பட்டது. 2025 வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு 1750 ரூபா வழங்குவதற்கு முயற்சித்தோம். இருப்பினும் அது முடியாமல் போனது. ஆனால் இம்முறை அந்த முயற்சி வெற்றிப் பெற்றுள்ளது.

முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவுக்கு செல்ல அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தினார். இதனை நியாயப்படுத்திய ஐக்கிய மக்கள் சக்தியினர் உட்பட எதிர்தரப்பினர் பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா வழங்க வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியதை கேள்விக்கேட்கிறார்கள்.

பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பளம் வழங்க அரச நிதியை ஒதுக்கியுள்ளமை தவறு என்று எதிர்க்கட்சியின் உறுப்பினரான நாமல் ராஜபக்சவும், எதிர்க்கட்சித் தலைவரின் ஊடக பேச்சாளரும் குறிப்பிடுகிறார்கள். அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன ‘மலையக மக்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பு தவறு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்போம்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பை எதிர்ப்பதா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தரப்பினரது கொள்கை. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவில் முறைப்பாடளியுங்கள். ஆளும்தரப்பு என்ற அடிப்படையில் பெருந்தோட்ட மக்களுக்காக நாங்கள் முன்னிலையாவோம். மலையக மக்களுக்கு 200 ரூபா வழங்குவதை நாமல் ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாச தரப்பு விரும்பவில்லை.

பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில்தனதுகட்சியின்நிலைப்பாட்டைஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தற்றுணிவோடு அறிவிக்க வேண்டும். அப்பாவி மலையக மக்களுக்கு வழங்கும் இந்த சம்பள அதிகரிப்பை நெருக்கடிக்குள்ளாக்குவது முற்புறிலும் தவறானது.

ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கும் இந்த அடிப்படையில் தான் ஆளும்தரப்பு சம்பளம் வழங்குகிறது. கொழும்பில் மே தின கூட்டத்தை நடத்த முடியாமல் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி மலையகத்துக்கே சென்றார்கள். அப்பாவி மலையக மக்களை ஒன்றிணைத்து மே தின கூட்டத்தை இவர்கள் நடத்தினார்கள். வரலாற்று காலம் முழுவதும் மலைய மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் வாக்களித்துள்ளார்கள். இம்முறை தான் எமக்கு வாக்களித்துள்ளார்கள்.

200 ரூபா வழங்குவதை எதிர்க்கட்சியினர் இன்று சவாலுக்குட்படுத்தியுள்ளார்கள். எச்சவால்கள் தோற்றம் பெற்றாலும் குறிப்பிட்டதை போன்று பெருந்தோட்ட மக்களுக்கு 200 ரூபா சம்பளத்தை நாங்கள் வழங்குவோம். அதேபோல் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுப்போம். ஏனெனில் அவர்களின் துயரத்தை நாங்கள் நன்கு அறிவோம். எதிர்க்கட்சியின் இந்த கீழ்த்தரமான செயற்பாட்டுக்கு எதிராக மலையக மக்கள் ஒன்றிணைந்து கடும் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்றார்.

## 4 பேர் கொண்ட குடும்பம் வாழ மாதம் 1 லட்சம் ரூபா தேவை

### பெரமுன எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு

நான்குபேர்கொண்டசாதாரணகுடும்பமொன்றுக்கு உணவுக்காக மாத்திரம் மாதந்தம் 65,500 ரூபா செலவாகும் என்று மூன்று வருடங்களுக்கு முன்னரே மதிப்பிடப்பட்டிருந்தது. இப்போது அந்தத் தொகை ஒரு இலட்சம் ரூபாவைத் தாண்டியிருக்கலாமென ஷ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் சானக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்ட உரை மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித வரியும் இல்லை என்று அரசாங்கத்தினால் கூறப்பட்டது. ஆனால் வாசிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 150 பில்லியன் ரூபா வட் வரி எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

18 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக வட் வரி அதிகரிப்பது மட்டுன்றி வரி செலுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் போது அரசாங்கத்திற்கு கிடைக்கும் வரி இலாபமும் அதிகரிக்கும். மறைமுக வரிகளை குறைப்பதாக கூறிக்கொண்டு வரி அறவிடுவதையே செய்கின்றனர்.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் கூறப்பட்டது. இதன்படி 56,145 ரூபாவே சாதாரண ஊழியர் ஒருவருக்குகிடைக்கும். ஆனால் சனத்தொகை மதிப்பீட்டு திணைக்களத்தில் வீட்டு மற்றும் வருமான செலவு கணக்கெடுப்பு மூன்று வருடங்களாக செய்யப்படவில்லை. இதனை செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற ஆய்வுக்குழு கூறியுள்ள போதும் அது இதுவரையில் நடக்கவில்லை.

என்றாலும் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி நபரொருவருக்கு தனது உடலுக்கு தேவையான களரியை பெற்றுக்கொள்வதற்கான உணவுக்காக 16,413 ரூபா மாதத்திற்கு செலவிட வேண்டும். அப்படியாயின் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு 65,500 ரூபா மாதத்திற்கு உணவுக்காக மட்டும் செலவிட வேண்டும். இது இப்போது ஒரு இலட்சம் ரூபாவையும் கடந்திருக்கும். அதனால் சம்பந்தப்பட்ட நிறுவனம் இது தொடர்பில் சரியான கணக்கெடுப்பை நடத்த வேண்டும்.

எனவே எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் விவசாயிகளின் பிரச்சினைகளையாவது தீர்க்குமாறு நாங்கள் அரசாங்கத்தை கேட்கின்றோம். இல்லையென்றால் அவர்கள் அன்றைய தினத்தில் நுகேகொட நகருக்கு வருவார்கள் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# என்ன செய்யப் போகிறார்கள்?

என்.சத்தியமூர்த்தி

அண்மையில் நான்கு நாள் பயணமாக இந்திய தலைநகர் புது டெல்லிக்கு வந்து திரும்பிய எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கையில் பதிமூன்றாவது சட்ட திருத்தத்தின் கீழான அதிகார பகிர்வை தாங்கள் ஆதரிப்பதாக்கக கூறியுள்ளார். இன்னும் சொல்லப்போனால், இது குறித்து இந்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக அவர் அந்நாட்டு தலைவர்களுடனான பேச்சு நடத்தி இருந்தார் என்று செய்திகள் தெரிவித்தன.

அதேசமயம், உள்நாட்டில் தொடர்ந்து பத்திரிகையாளர்களைச் சந்தித்துவரும் ஆளும் ஜேவிபி பொது செயலாளர் ரில்வின் சில்வா, பதிமூன்றாவது திருத்தத்தின் கீழான மாகாண சபைகளை ஒழிப்பதே தங்களது கட்சியின் தேர்தல் கால வாக்குறுதியாகும் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறி வருகிறார். அவ்வாறு பேசுவதற்கு அவருக்கு அரச தலைவர் அநுரகுமாரவின் அனுமதி அல்லது உத்தரவே இருக்கிறது என்றே கருத வேண்டும்.

இடையே, அநுர, ரில்வின் ஆகிய இருவர்களில் யார் மக்களை ஏமாற்றுகிறார்கள், அல்லது அவர்கள் இருவரில் யார் கட்சிக்குள் முக்கியஸ்தர் என்ற உள்வீட்டு கலகம் தோன்றி உள்ளதா, என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அந்த வகையில், கொழும்புவில் பணியாற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் தொடர்ந்து ரில்வின் சில்வாவை ஜேவிபி தலைமையகத்திலே சந்தித்துப் பேச்சு நடத்துவது, பல்வேறு சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்புகின்றன.

இவற்றின் இடையே தமிழர்களுக்கான அரசியல் தீர்வு சிக்கிக்கொண்டு உதைபடப் போகிறதா என்பதே தற்போதைய கேள்வி. காரணம், ரில்வின் சில்வா கூறுவது போல், மாகாண சபை இல்லாமல், அனைத்து இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளும் முகமான அரசியல் தீர்வு எவ்வாறு சாத்தியமாகும்?

வேண்டுமென்றால், முந்தைய மாவட்ட வளர்ச்சிக் குழுக்களை போன்ற அமைப்புகளை உருவாக்கி, அவற்றிற்கு, இங்குள்ள ஜேவிபி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவையே தமிழர்களின் இன ஆதரவாகக் காட்டிக்கொள்ளலாம். ஆளும் கூட்டணிக்கு, நாடாளுமன்றத்தில் உள்ள அசுர பலத்தின் மூலம், புதிய அரசியல் யாப்பை இயற்றிக் கொள்ளலாம்.

## கீழே விழுந்தாலும்

இந்தப் பின்னணியில், இங்குள்ள தமிழ் தலைமைகள் என்ன செய்யப்போகின்றன? ஏற்கனவே, தங்களால் காணமலாக்கப்பட்ட மறந்துபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினை மீளமைப்புச் செய்யவேண்டுமென்று தமிழ் அரசுக் கட்சித் தலைமை கொளுத்திப்போட்டுள்ளது. இடைகாலத் தலைவர் சிவஞானம் மற்றும் இடைகால பொது செயலாளர் சுமந்திரன் ஆகியோரே கட்சித் தலைமையின் இந்த முடிவை அறிவித்ததால், எப்போதும் தனியாவர்த்தனம் பாடும் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறீதரனுக்கும் இது ஏற்புடையதே என்று கருத இடமிருக்கிறது.

ஆனால், தற்போதைக்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்று தனிப்பட்ட அமைப்பில் ஐக்கியமாகியுள்ள முன்னாள் பங்காளிக் கட்சிகள் கூறுவது என்ன? அடுத்தடுத்து தேர்தல் தோல்விகளை சந்தித்த அவர்கள், தமிழ் அரசின் தற்போதைய அழைப்பை ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள். அதேசமயம், கீழே விழுந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லை என்ற அளவில் அவர்கள் அனாவசியமாக அலட்டிக்கொள்வார்கள். இது ஒன்றும் அவர்களுக்கு முதல் முறை அல்ல.

எது எப்படியோ, தற்போதைய ஒருங்கிணைப்பு முயற்சிகள் அடுத்து வரவிருப்பதாகக் கூறப்படும் மாகாண சபைத் தேர்தலை ஒட்டியே இருக்கும். இப்போது மாகாண சபைத் தேர்தல் இல்லை என்று ஆன பிறகு, அவர்கள் அனைவரையுமே ஒருங்கிணைப்பை பின்தள்ளி போடவே வாய்ப்பு உள்ளது. காரணம், இரு சாராரும் கூறும் ஒன்றிணைப்பு அல்லது ஒருங்கிணைப்பு தேர்தல் சார்ந்த உத்தியே. கொள்கை அல்லது மனோபாவம் சார்ந்த விடயம் அல்ல.

## அரசியல் லூட்டி

புதிய அரசமைப்பின் மூலம் மாகாண சபை அத்தியாயத்திற்கு மூடு விழா நடத்த போவதாக அறிவித்தாலும், ஜேவிபி-ன் ரில்வின் சில்வா, அந்த அமைப்பு அரசியல் யாப்பில் இடம்பெற்றிருக்கும் வரை அதற்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் கூறி உள்ளார். இது யாரை ஏமாற்ற? அல்லது, யாரை பகடி பண்ண? தமிழ் மக்களை மட்டுமல்ல, நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் அவர் கேலி செய்கிறார் என்ற முடிவிற்கே அறிவுள்ள யாரும் வருவார்கள்.

அது எப்படியோ, ரில்வின் கூறியது போல, இந்த ஆளும்தரப்பு மாகாண சபை முறைமையையே அழிக்கப் போகிறது என்றால், அது குறித்த தமிழ் கட்சிகளின் கருத்து என்ன? அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?

இப்போதே அவர்களில் சிலர் பதிமூன்றாவது திருத்தத்தின் மீது சத்தியம் செய்வார்கள். வேறு சிலர் இப்போதும் பதிமூன்றிற்கு அப்பாலும் என்று பதிகம் பாடுவார்கள். பிறிது சிலரோ, இல்லை, இல்லை, எங்களுக்கு சமஷ்டி முறையே ஏற்புடையது என்று முரண்டு பிடிப்பார்கள்.

ஆனால் தென்னிலங்கை ஆளும் வர்கத்தினரோ, தங்கள் இஷ்டத்திற்கு அரசியல் சட்டத்தை மாற்றி அமைத்து தென்னிலங்கையில் மார் தட்டிக் கொள்வார்கள். அவர்களது தேர்தல் கவலை அவர்களுக்கு. தற்போது நழுவி வரும் குறைந்த வாக்கு சதவீதத்தையாவது தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் இவ்வாறெல்லாம் கூத்தாடவேண்டும்.

அது காலத்தின் கட்டாயம். ஆனால், அதனையே தங்களது அரசியல் கொள்கையோடும், அது சார்ந்த தேர்தல் அறிக்கையோடும் இணைத்துப் பேசி, தங்களது முடிவை நியாயப்படுத்திக் கொள்வார்கள். அந்தப் பருப்பு இங்கே வேகாது என்று வேண்டுமென்றால், தமிழர்கள் கூறிக்கொள்ளலாம். ஆனால், இனப்போர் முடிந்த பதினைந்து ஆண்டுகளில் தமிழ் அரசியல் அமைப்புகள் அடித்த சிறுபிள்ளைதனமான லூட்டி மட்டுமே இத்தகைய நிலைமையில் தமிழ் இனத்தைக் கொண்டு விட்டிருக்கிறது.

## அரசியல் நிலைபாடு

ரில்வின் சில்வாவின் கூற்று ஆளும் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்தது. அதுவே, 1987 தொடங்கி, ஜேவிபியின் அரசியல் நிலைபாடு. பொதுவெளியில் பேசவில்லை என்றாலும், தான் சந்தித்த





சர்வதேச தலைவர்களிடம், அதிபர் அநுர இந்தக் கருத்தைத் திட்டவட்டமாக எடுத்துரைத்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருந்தன.

இந்த ஆளும்தரப்பைப் பொறுத்தவரையில், எந்த அந்நிய சக்தியாக இருந்தாலும், அவர்களது நியாயமான கவலைகளைக் கரிசனமாக நோக்கும் என்பதே அவர்களது கொள்கை என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், அவை இருதரப்பு வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த விடயங்களோடு மட்டுமே சார்ந்திருக்கும். சார்ந்திருக்கவேண்டும், என்பதும் தற்போதைய ஆளும் தரப்பின் கோட்பாடு.

அதேசமயம், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அவ்வாறான வெளிநாட்டுக் கரிசனை அல்லது குடுக்கீடு ஏற்புடையதல்ல என்பதும் இந்த அரசின் அயலுறவுக் கொள்கையின் முக்கிய அம்சம். சாராம்சம். இதில், இனப்பிரச்சினைக்கான தீர்வும் உள்ளடங்கும்.

அதாவது, ஜேவிபி தலைவர்கள் கூறி வருவது போல, மாகாண சபைகளை கலைத்துவிட்டு, அனைத்து இனங்களையும் அரவணைத்துக் கொண்டு, அனைத்து இனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்படகூடிய புதிய தீர்வுத் திட்டத்தையே முன்னெடுப்பார்கள். அதற்கு, அனைத்து இனங்களின் ஆதரவும் கேட்டு பெறப்படும். என்றே மக்கள் தற்போதைக்கு புரிந்து கொள்ளவேண்டும்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் என்ன என்பதை அவர்கள் தெளிவுபடுத்தவில்லை. அது குறித்த அடிப்படைக் கருத்துகளாவது அவர்களிடம் உள்ளதா, என்பதுகூடத் தெரியவில்லை. ஆனால், பதிமூன்றாவது தீர்வுத் திட்டத்தையும் இந்திய அமைதிப் படையையும் ஆயுதக் கிளர்ச்சி மூலம் எதிர்த்து, பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களையும், இளம் பெண்களையும் காவு கொடுத்துவிட்டு, அவர்களால் மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

## பழைய பல்லவி

இவை குறித்தெல்லாம், தமிழ் அரசியல் தலைமைகள் என்ன சொல்கிறார்கள்? வழக்கம் போல. சர்வதேசத்தின் ஆதரவுடன் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லப் போகிறார்களா? அல்லது, பதிமூன்றாது திருத்தம் இந்தியாவின் குழந்தை. எனவே, தற்போதும் மாகாண சபை முறைமையை தொடர்வதற்கு இந்திய அரசே இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று பழைய பல்லவியை பாடிவிட்டு, தங்கள் பாட்டிற்கு உள்குத்து அரசியலைத் தொடரப் போகிறார்களா?

தற்போதைய நிலையில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒருங்கிணைந்து தெளிவான செயல் திட்டத்தை வடிவமைத்துக் கொள்ளவேண்டும். அதனுள், கஜேந்திரகுமார் அணியினரை எவ்வாறு இழுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். அவரது சமஷ்டித் திட்டம் குறித்துப் பேசுதற்கே மாகாண சபை தேவையான அமைப்பு. முதலுக்கே மோசம் என்று வரும்போது, அவர் இன்னமும் இல்லாத ஊருக்கு வழி தேடிக்கொண்டு இருக்கப் போகிறாரா?

மாகாண சபைத் தேர்தல் என்று பேச்சு எழுந்ததைத் தொடர்ந்து, தனது ஐந்தாறு ஆண்டு யாழ்பாணப் அதிரடியாக முடித்துக் கொண்டு தலைநகர் கொழும்புவிற்கு திரும்பியிருந்த விக்னேஸ்வரன், திடீரென்று தனது புதிய தளபதியான மணிவண்ணனை உசுப்பி விட்டுள்ளார். அல்லது, முன்னாள் யாழ்பாண மேயரான மணிவண்ணன், விக்னேஸ்வரனை அவரது அரசியல் தூக்கத்தில் இருந்து துயில் எழுப்பி உள்ளார்.

இருவருமாக சேர்ந்து தங்களது 'மான்' சின்னத்தை விடுதலை புலிகள் அமைப்பின் கொடி லெவலுக்கு மாற்றி அமைத்துள்ளனர். யாரை ஏமாற்ற இந்த வேலை? அல்லது, பலரும் சொன்னது போல், தமிழ் அரசு மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மிதவாதத் தோலைப் போர்த்திக்கொண்டு, வட மாகாண முதலமைச்சராக ஐந்து ஆண்டுகள் வலம் வந்ததுதான் விக்னேஸ்வரனின் விளையாட்டா?

## தோல்வியே மிஞ்சும்

எது எப்படியோ, தமிழர்களது அரசியல் உரிமைகளை, குறிப்பாக அவற்றிற்கு சான்றுரைக்கும் மாகாண சபையை திரும்பப் பெறும் முகமாக அனைத்துத் தமிழ் தலைமைகளையும் ஒன்றிணைப்பது காலத்தின் கட்டாயம். அத்தகைய அணியில், வடக்கே டக்ளஸ் தேவானந்தா, கிழக்கே பிள்ளையான் ஆகியோரும் உள்வாங்கப்படவேண்டும்.

எப்போது, தமிழ் கட்சிகளின் பிரிந்துபட்ட வாக்குவங்கியை தனக்குச் சாதமாக்கிக்கொண்டு, ஆளும் ஜேவிபி அணி குறிப்பாக வடக்கு மாகாணத்தில் அழுத்தமாகக் கால் பதித்து விட்டதோ, அப்போதே முன்னவர்கள் விழித்துக் கொண்டிருக்கவேண்டும். இன்னமும் தமிழ் வாக்கு வங்கிகளை சிதறடித்து அரசியல் செய்தால், தோல்வியே மிஞ்சும். எதிர்கால சந்ததியினர் இந்த தலைவர்களை மன்னிக்க மாட்டார்கள்.

ஆனால், நடப்பது என்ன? மறந்துபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை மறுபடியும் உயிர்த்தெழ செய்ய, தமிழ் அரசு கட்சி, இப்போதே நிபந்தனைகளை விதித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்னமும் இந்தப் பெரியண்ணன் கதை தொடர வேண்டுமா? கஜேந்திரகுமார் குறித்துச் சொன்னது போல், தமிழ் அரசுக் கட்சியும் சுவர் இருந்தால் மட்டுமே சித்திரம் வரைய முடியும் என்ற அடிப்படை உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில், வட மாகாண சபை தேர்தலில் சுமந்திரனே தமிழ் அரசு கட்சியின் முதல்வர் வேட்பாளர் என்று அவரே அறிவித்துள்ளார் என்று செய்திகள் வெளியாயின. அவை மறுக்கப்படவில்லை. ஆனால் ரில்வின் சில்வா கூறியது போல் காய்கள் நகர்த்தப்பட்டால், மாகாண சபைக்கு அடுத்து தேர்தல் நடத்தப்படும் வாய்ப்பே இருக்காது.

காரணம், எப்போது இந்த அரசு மகாண சபை தேர்தல் முறைகளில் உள்ள சட்டசிக்கல்களை அவிழ்த்து தேர்தல் நடத்தப் போகிறது? எப்போது, அதற்காக காத்திருந்து, அதன் பின்னரே புதிய யாப்பை முன்னெடுத்து மாகாண சபைகளை இல்லாமலாக்கப் போகிறது.?

மாகாண சபைகளுக்கு மூடு விழா நடத்தப்பட போவதென்றால், எந்த ஒரு அடி முட்டாளும் இடையில் தேர்தல் மூலம் அதற்குப் புத்துயிர் கொடுத்து, அந்தத் திட்டம் தொடர்வதற்கான போராட்டங்களை முன்னெடுக்க வழி செய்து கொடுப்பார்கள்? இதில் தமிழர் தலைமைகள் புரிந்துகொள்ள வேண்டிய மற்றொரு விடயம் உள்ளது.

## திமிர் தனம்

எப்போதுமே தங்களைக் குறித்து மட்டுமே சிந்தித்து, மாகாண சபைத் திட்டம், தமிழர்களுக்காக மட்டுமே உருவாக்கப்பட்டது என்று தமிழ் தலைமைகள் முடிவு செய்து கனகாலம் ஆகிவிட்டது. ஆனால், உண்மை அதுவல்ல. தென்னிலங்கையிலும் மாகாண சபைகள் செயல்பட்டு வந்தன. எனவே, அவற்றிற்கு மூடு விழா நடத்தப்பட்டால், அதன் இழப்பு அவர்களுக்கும்தான்.

இவ்வாறு சிந்தித்து, கிழக்கில் முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் குறிப்பாகத் தென்னிலங்கை அரசியல் தலைமைகளோடு பிரச்சினையை முன்னெடுத்து அதனை ஒரு தேசிய போராட்டமாக மாற்ற தமிழர் தலைமை முயற்சி செய்யுமா? அவ்வாறு செய்தாலும், அதிலும் 'நான் பெரியவனா, நீ பெரியவனா?' என்ற தங்களது திமிர் தனத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளோடும் ஒருங்கிணைந்து அரசியல் செய்ய அவர்கள் தயாராவார்களா?

இல்லையென்றால், அவர்களை நிகழ்காலம் மட்டுமல்ல. எதிர்காலமும் மன்னிக்காது.

காலைக்கதிர் Kalaikkathir

## சாத்தியமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியான தமிழ் அரசுக் கட்சியுடன் உரையாடலை நடத்தியமையை இட்டு மகிழ்ச்சி அடைவதாகவும் விரைவில் வடக்கு, கிழக்குப் பயணிக்க இருக்கிறார் என்றும் தெரிவித்தார். பிரான்ஸ் முன்னெடுத்து வருகின்ற அபிவிருத்தி மற்றும் மக்கள் நல உதவித்திட்டங்கள் சம்பந்தமாகவும் பகிர்ந்து கொண்டிருந்தார்.

## மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. அதாவது இடதுசாரிக் கொள்கையுடன் போராடிய ஒரு மாவீரர் ரோகண விஜேவீரவின் நினைவுநாள்.

இந்த நாளிலேயே அவர் இலங்கை அரச படையினால் கொல்லப்பட்டார். அதில் ஜே.வி.பியினர் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் நினைவஞ்சலியில் எமது அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

இந்தக் கார்த்திகை மாதத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் மாவீரர்கள் நாளும் வருகின்றது. வடக்கு கிழக்கில் 32க்கும் மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் உள்ளன. எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடிய மாவீரர்கள் விதைக்கப்பட்ட அந்தப் புனிதமான இடங்களைப் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு உள்ளது.

இந்த ஆளும்தரப்பு வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களையும் அங்கே வாழும் தமிழ் மக்களிடம் கொடுக்கவேண்டும். அந்த இடங்களை அங்கீகரிக்கவேண்டும். அங்கே நிலைகொண்டுள்ள படையினரை அகற்ற வேண்டும்.

மக்கள் சுயாதீனமாக அங்கே நினைவு கூரலை நடத்துவதற்கு இடத்தைக் கொடுக்கவேண்டும். அந்த இடத்தை அங்கீகரித்து பொதுமக்களுக்கு அதனை கொடுக்கும்போது நீங்கள் அதற்கு நிதி ஒதுக்கத் தேவையில்லை. நாங்கள் தமிழர்கள் அதற்கான நிதியை ஒதுக்கி அந்த புனிதமான இடத்தை பாதுகாப்போம் என்பதனை தெளிவாகக் குறிப்பிட்டுக்கொள்கிறோம். இந்த ஆளும்தரப்பு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## எனக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் சபையில் மன்றாடினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின்போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்திகளை, இணையவழி ஊடக வாயிலாகவும், போலியான முகநூல் கணக்கினூடாகவும், யூடியுப் ஊடாவும் எனது பெயருக்கும், பதவிக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் கடந்த சில வாரங்களாக சில தனி நபர்களாலும் ஐ.பி.சி எனப்படும், ஊடகத்தாலும் செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

தற்கொலை செய்து உயிரிழந்த ஒருவரது இறப்பை என்னுடன் சம்பந்தப்படுத்தி, கொலை செய்யப்பட்டார் எனப் பொய்ப் பிரசாரம் செய்யப்படுகிறது. மேலும் பொய்யான தனித்தனியாக, துண்டு துண்டாக பதிவு செய்யப்பட்ட தொலை பேசி உரையாடல் குரல் பதிவுகளை, வெட்டியும் ஒட்டியும் திரிபுபடுத்தியும் தவறாகச் சித்திரித்தும் எனக்கு எதிராகப் பயன்படுத்தி போலி முகநூல்களில் பரப்பபட்ட செய்திகளை ஆதாரமாகக் கொண்டு முகநூல்களில் பதிவேற்றியமையால் எனது கௌரவத்திற்கும், தனிப்பட்ட மரியாதைக்கும், நம்பிக்கைக்கும், பொது மக்கள் மத்தியிலும், அரசியல் பரப்பிலும், சர்வதேச மட்டத்திலும் பங்கம் விளைவிப்பதோடு தவறான தோற்றப்பாட்டையும் ஏற்படுத்துகிறது. இதனால் நான் பெரிதும் மனஉளைச்சலுக்கும் துன்பத்துக்கும் ஆளாகியுள்ளேன்.

யாழ்ப்பாணம் நகரத்தில், பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் இயங்கி வரும் பிரித்தானிய, லண்டன் நகரைப் பதிவாக கொண்ட, இணையவழி ஊடகமான ஐபிசி சில தனிநபர்களை அழைத்து எனக்கு எதிரான மேற்கூறிய கருந்துக்களை ஒளிப்பதிவு செய்து வெளியிட்டுள்ளது

இவ்வூடகத்திற்கு பாதுகாப்பு தரப்பினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். அனுமதியில்லாமல் இந்த ஊடகம் இயங்குகிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது.

அத்துடன் காலைக்கதிர் எனும் இணையவழி மஞ்சள் ஊடகம் 11-11-2025 வெளியிட்ட வெளியீட்டில் எனது பெயரைக் குறிப்பிட்டு நான் கைது செய்யப்படுவது உறுதி என செய்தி வெளிட்டுள்ளனர்.

இவ்வாறான பொய்யான தகவல்கள் நாடாளுமன்ற சிறப்புரிமை (நாடாளுமன்ற சிறப்புரிமை அதிகாரச் சட்டம்) சட்டம் 22 (2) பிரிவினை மீறும் செயற்பாடாகும் இவ்வாறான சட்டமீறல் குற்றவியல் தண்டனைக் கோவைச் சட்டத்தின் 90ஆவது பிரிவினை மீறுகிறது என்பதனையும் அதன மூலம் மேல் நீதிமன்றத்தில் தண்டனை வழங்க வேண்டிய குற்றமாகும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றேன்.

இவர்கள் சட்டத்தை கையில் எடுத்து தவறான செய்தியை வெளியிடுவது பாரதூரமான களங்கத்தை எனக்கு ஏற்படுத்துகிறது. உண்மையற்ற, ஆதாரமற்ற, பொய்யான இச்செய்திகளை வேண்டுமென்றே பரப்பும் இவர்களின் செயல் எனது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும், அவமதிக்கும் நடவடிக்கையாக உள்ளதால், மேற்படி விடயத்தினை சிறப்புரிமைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தி எனக்கு நீதி வழங்குமாறு வேண்டிக் கொள்கிறேன் என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின்போது நிலையியற் கட்டளை 29/2 இன் கீழ் யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா தனது கேள்வியில் தெரிவித்ததாவது:

புதன்கிழமை மன்னார் மாவட்டம் உள்ளிட்ட வடக்கு மாகாணம் முழுவதும் தாதியர் உத்தியோகத்தர்கள் அடையாளப் போராட்டமொன்றைத் தொடங்கியுள்ளனர். இது தொடர்ந்தும் நடந்தால் வடக்கு மாகாண பொதுமக்கள் தேவையில்லாத பிரச்சினைக்கு உள்ளாகுவார்கள்.

வடக்கு மாகாணத்தில் மட்டுமே சுகாதார துறையில் செய்துள்ளனர். அதாவது சகல உத்தியோகத்தர்களும் ஒரே புத்தகத்தில் கையெழுத்திடும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தயவு செய்து வடக்கு மாகாணத்தில் உள்ள தாதியர் உத்தியோகத்தர்களின் பிரதிநிதிகளை அழைத்து சுகாதார அமைச்சில் இது தொடர்பில் கலந்துரையாடி இதனை முடிவுக்கு கொண்டுவரவும். இது பொதுமக்களுக்கு பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது - என்றார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, 'வடக்கில் நடந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் என்னுடன் கலந்துரையாடினர். அந்தப் போராட்டம் ஒரு நாளே நடந்தது. குறிப்பாக தாதியர் உத்தியோகத்தர்களின் வரவு பதிவு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அது தொடர்பில் மாகாணச் செயலாளர் மற்றும் ஆளுநர் அடங்கலாக மாகாணப் பிரதானிகளுக்கும் மாகாண சுகாதார பணிப்பாளருக்கும் இடையே கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அந்தக் கலந்துரையாடலுக்கமைய இணக்கப்பாட்டுக்கு வரமுடியும்.

எவ்வாறாயினும் வைத்தியசாலை பணியாளர்களின் வருகை தொடர்பில் கணக்காய்வொன்று நடத்தப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே மாகாண சபை இந்தத் தீர்மானத்திற்கு வந்துள்ளது. இது தொடர்பில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன - என்றார்.

## இணைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அத்தனகலைப் பிரதேச செயலகப் பிரிவின் வெலகெதர எனும் கிராமத்தில் ஹிமாயா செவ்வெந்தி என்ற இளம் பெண் இணையவழி கடன் மாபியாவில் சிக்கித் தனது உயிரை மாய்த்துக் கொண்டார் என அறியக்கிடைப்பதனால், இந்த விடயம் தொடர்பில் ஆளும்தரப்பு கவனம் செலுத்த வேண்டும் .

இது போன்ற இணையவழி கடன் வழங்கும் பல சட்டவிரோத நிறுவனங்கள் காணப்படுவதனால், இது தொடர்பாக ஒரு முறையானதொரு சட்டத்தை அமுல்படுத்தப்பட வேண்டும். இந்த விவகாரத்தை ஆராய்ந்து பாரத்து, மேலும் பல உயிர்கள் பலியாகும் முன், இதனை இல்லாதொழிப்பதற்காக ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்றார்.

## முடிந்தால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைவிட நாட்டின் அபிவிருத்திக்கு எதிராக . ஜேவிபியும் விடுதலை புலிகளும் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். ஜேவிபி அமைக்கப்பட்டு 60 வருடங்களில் இந்த நாட்டை ஆட்சி செய்துவந்த அனைத்து ஆளும்தரப்புகளுக்கும் எதிராகச் செயற்பட்டு வந்தது. அதேபோன்று வெளிநாட்டு ஒப்பந்தங்களுக்கு எதிராகந் செயற்பட்டு வந்தார்கள். ஆனால் இன்று எமது வெளிநாட்டுக்கொள்கை, கல்விக்கொள்கை, பொருளாதாரக் கொகை என எல்லாவற்றையும் ஜேவிபி ஏற்றுக்கொண்டிருக்கிறது. அன்று இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்காவிட்டால், நாடு அபிவிருத்தியடைந்திருக்கும்.

மேலும் நாடு வீழ்ச்சியடைவதற்கு இந்த ஆளும்தரப்பும் பொறுப்புக்கூறவேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறும்போது அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால் இன்று நாணய நிதியத்தின் தாளத்துக்கும் ஆடும் நிலையில் அரசுத் தலைவர் அநுரகுமார இருக்கிறார். மக்களின் அத்தியாவசிய பொருட்களின் நூற்றுக்கு 18 வீதம் வரியைக் குறைப்பதாக அரசுத் தலைவர் தெரிவித்திருந்தார். குறைத்தீர்களா என கேட்கிறோம். துறைமுகத்தில் இறக்கப்படும் கட்டணத்துக்கு எரிபொருள் வழங்குவதாக அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்திருந்தார். வழங்குகிறார்களா? எமது காலத்தில் இருந்ததைவிட எரிபொருள் விலை தற்போது அதிகமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கைபொம்மையாக மாறியுள்ள இந்த ஆளும்தரப்பு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்துள்ளது. நாங்கள் அட்சியில் இருக்கும்போது நாட்டில் வறுமை வீதம் நூற்றுக்கு 10 வீதமாகவே இருந்தது. தற்போது அது நூற்றுக்கு 35வீதமாக அதிகரித்துள்ளது. அதனால் திறைசேரியில் பணம் அதிகமாக இருந்தால், மக்களுக்கு வழங்குவதாக தெரிவித்த நிவாரணங்களை வழங்குங்கள். அரச ஊழியர்களின் வாக்குகளை பெற்றுக்கொண்ட ஆளும்தரப்பு அரச ஊழியர்களை ஏமாற்றி இருக்கின்றனர்.

எனவே வரவு செலவு திட்டத்தில் அரசதுறை, தனியார் துறை என யாருக்கும் எந்த நன்மையும் இல்லை. அதனால் மக்கள் ஆளும்தரப்புக்குப் பதிலளிக்க மாகாணசபை தேர்தலை எதிர்பார்த்து இருக்கிறார்கள். அதனால் முடிந்தால் ஆளும்தரப்பு மாகாணசபை தேர்தலை நடத்தட்டும். பொதுத் தேர்தலைவிட உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஆளும்தரப்பிற்கு 23 இலட்சம் வாக்குகள் குறைவடைந்தன. மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் மேலும் 25 இலட்சம் வாக்குகள் இல்லாமல்போகும். அதனால் முடிந்தால் தேர்தலை நடத்துமாறு ஆளும்தரப்பிற்குச் சவால் விடுகிறேன் -என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# படையினரை முற்றாக அகற்றாது வட–கிழக்கில் போதைப் பொருளை இல்லாதொழிக்க முடியாது

## கஜேந்திரகுமார் எம்.பி. திட்டவட்டம்

வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து இராணுவத்தினரை முழுமையாக அகற்றாமல் அங்கு போதைப்பொருளை இல்லாதொழிக்கமுடியாது. போதைப்பொருள்விநியோகத்துக்கும் பாதுகாப்புதரப்புக்கும்இடையில்தொடர்புண்டுஎன்று அமைச்சர் சந்திரசேகர் குறிப்பிடுகிறார். அவ்வாறு தொடர்பில்லை என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் குறிப்பிடுகிறார். இளைஞர்களைத் திசைத்திருப்புவதற்காகவே வடக்கு,கிழக்கில் போதைப்பொருள் திட்டமிட்ட வகையில் விநியோகிக்கப்படுகின்றன. போதைப்பொருள் ஒழிப்புக்குரிய நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்ளுங்கள் நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குகிறோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

மாற்றத்தை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு கீழ் மல்வத்துஓயா திட்டத்தில் சிங்கள மக்களை குடியேற்ற திட்டமிடப்படுகின்றது. சிங்கள மக்கள் வடக்கு , கிழக்கில் வாழ்வதில் எங்களுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை. ஆனால் வடக்கு மற்றும் கிழக்கில் இனப்பரம்பலை மாற்றுவதற்கு முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட செயற்பாடுகளை நாம் கடுமையாக எதிர்ப்போம் எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் சந்திரசேகரன் இந்தச் சபையில் உரையாற்றும் போது வடக்கு மற்றும் கிழக்கில் போதைப்பொருளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறினார். எவ்வாறாயினும் வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரால் போதைப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதனால் இராணுவத்தை அங்கிருந்து நீக்கும் வரையில் அங்கே போதைப் பொருளை இல்லாமல் செய்ய முடியாது.

இளைஞர்களின் போராட்டத்தை தடுப்பதற்கான உபாய மார்க்கமாகவே அங்கே போதைப்பொருள் திட்டமிட்ட வகையில் விநியோகிக்கப்படுகிறது. அந்த நிலமை போர் முடிவடைந்தது முதல் தொடர்கின்றது. இதனை நிறுத்தவேண்டும். அவ்வாறு செய்யாமல் ஆளும்தரப்பின் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை முற்றுப்பெறாது. அமைச்சர் சந்திரசேகரன் கடந்த பல வருடங்களாக யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றார். இதனால் அவருக்கு நான் கூறுவதைப் புரிந்துகொள்ள முடியுமாக இருந்திருக்கும்.

ஆனால் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அவ்வாறு இராணுவம் அதில் சம்பந்தப்படவில்லை என்று கூறியுள்ளார். மாவட்டக் குழுக்கூட்டத்தில் போதைப் பொருள் தொடர்பான விடயங்களை நாங்கள் முன்வைத்துள்ளோம். இதில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளதாக அந்தக் கூட்டங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அவ்வாறு இல்லை என்று கூறுகின்றார்.

எவ்வாறாயினும் இந்த ஆளும்தரப்பிற்கு போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தின் தொடர்பை இல்லாமல் செய்யாமல் போதைப் பொருளை ஒழிக்க முடியாது. அது தெற்கிற்கும் பரவியுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் புற்றுநோயாக உருவாகி இப்போது முழு நாட்டுக்கும் பரவியுள்ளது.

இதேவேளை இந்த வரவு செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாணம் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு தொடர்பில் குறிப்பிடப்பட்டதுடன்வீதிஅபிவிருத்திக்காகநிதியும்ஒதுக்கப்பட்டது. அந்த நிதி போதுமானது அல்ல என்றும் கூறியிருந்தோம். ஆனால் இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் எதுவுமில்லை.

35 வருடங்களாக வடக்கு மற்றும் கிழக்கு போரால் பாதிக்கப்பட்டது. அந்த மாகாண மக்கள் பொருளாதார தடைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.. 2001ஆம் ஆண்டில் ஒரு லீற்றர் பெற்றோல் விலை 2000 ரூபாவாகவே இருந்தது. விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி சாதாரண தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டவர்களாக இருந்தனர். இந்நிலையில் போரிற்குப் பின்னர் ஏதாவது ஆளும்தரப்பு வடக்கு மற்றும் கிழக்கை ஏனைய மாகாணங்களில் இருந்து வித்தியாசமானது என்பதனை ஏற்றுக்கொண்டதா என்றால் இல்லை. கடந்த ஆளும்தரப்புக்கள் போரிற்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் பொருளாதார முன்னேற்றங்களை ஏற்படுத்தவில்லை. ஆனால் இந்த ஆளும்தரப்பு அவ்வாறு அல்ல. மாற்றத்திற்காக வந்தவர்கள் என்றே பார்க்கப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களை பாதுகாப்பவர்கள் என்றே கருதப்பட்டது. ஆனால் இந்த ஒரு வருடத்தில் ஆளும்தரப்பு அவ்வாறு எதனையும் செய்யவில்லை.

கீழ் மல்வத்துஓயா திட்டத்தில் சிங்கள மக்களை குடியேற்ற திட்டமிடப்படுகின்றது. சிங்கள மக்கள் வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்வதில் எங்களுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை. அவர்கள் எங்களுடன் ஒன்று சேர்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால் வடக்கு, கிழக்கில் இனப்பரம்பலை மாற்றுவதற்கு முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட செயற்பாடுகளை எதிர்ப்போம்.

இதேவேளை நான்கு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்ய 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாணம் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட வேண்டும். ஆனால் ஆளும்தரப்பு ஒதுக்கியுள்ள நிதியில் ஒரு விமான நிலையத்திற்கு 250 மில்லியன் ரூபா போதுமா? யாழ்ப்பாண விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இது எந்த வகையில் போதுமானதாக இருக்கும்?

வடக்கில் 2,500 வீடுகளை அமைப்பது தொடர்பில் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரு வீட்டுக்காக இரண்டு மில்லியன் ரூபா செலவாகும். இது வரவேற்கத்தக்கது. எனினும் இந்தியா 15,000 வீடுகளை அமைப்பதற்கு தயாராக இருக்கின்றது. அது தொடர்பிலும் சிந்திக்க வேண்டும்.

முறைமை மாற்றத்திற்காக அதிகாரத்திற்கு வந்துள்ள ஆளும்தரப்பு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இடையிலான இடைவெளிகளை புரிந்துகொள்ள வேண்டும். அந்த மாகாணங்களை மற்றைய மாகாணங்களைவிட விசேட சிறப்பு மாகாணங்களாக கருதாத வரையில் அங்குள்ள மக்களை இந்த நாட்டை விட்டு வெளியேறுமாறு கூறுவதாகவே இருக்கும். அங்குள்ள மக்கள் வெளியேறும் வகையில் நிலமைகளை உருவாக்குவது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல.

இலங்கை உண்மையான அபிவிருத்தியை அடைய வேண்டுமென்றால் தென்னிந்திய பொருளாதாரத்தை இலங்கையுடன் இணைக்க வேண்டும். பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இந்தியா தயாராக இருக்கின்றது. ஆனால் ஆளும்தரப்பு அதற்குத் தயாராக இல்லை. கடந்த ஆளும்தரப்பும் இவ்வாறே நடந்துகொண்டது.

டுபாய், சிங்கப்பூர் போன்ற இடங்களில் இருந்து விமானங்கள் வரும் வகையில் அதனை அபிவிருத்தி செய்யவேண்டும். இதனால் விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக இந்தியாவின் உதவியை நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். ஏன் அதனைப் ஏற்றுக்கொள்ளாமல் அந்த அபிவிருத்தியை தடுக்க வேண்டும்? பொருளாதார அபிவிருத்தியை செய்ய தென்னிந்தியாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பயணிக்க வேண்டும். அதற்கான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் - என்றார்.

# புனித யாத்திரையாக சபரிமலைப் பயணம் அறிவிப்பு

இந்தியாவில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு மேற்கொள்ளும் யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனம் செய்துள்ளோம். கடந்த காலங்களில் எத்தனை ஆளும்தரப்புக்கள் இருந்தன. எவரும் இதனை கருத்திற் கொள்ளவில்லை. மத விவகாரங்களில் பாரபட்சம் காட்டப்படுவதாக குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம் என புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உரிமைகளை வென்றெடுக்க போராட்டம் செய்ய வேண்டிய அவசியமில்லை. மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சகல பிரச்சினைகளுக்கும் நாங்கள் தீர்வளித்துள்ளோம் என்று குறிப்பிடவில்லை. கட்டம் கட்டமாகவே அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வளிப்போம்.

அனைத்தையும் எதிர்க்கும் மனநிலையில் உள்ள எதிர்க்கட்சியினர் வரவு - செலவுத் திட்டத்தையும் எதிர்ப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல, இந்து மத விவகாரத்துக்கு நிதி ஒதுக்கியுள்ளமை குறைவாக உள்ளது என்று எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். இது முற்றிலும் தவறானது.

தேசிய தைப்பொங்கல் உற்சவத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடினோம். இந்தியாவில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு மேற்கொள்ளும் யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனம் செய்துள்ளோம். கடந்த காலங்களில் எத்தனை ஆளும்தரப்புக்கள் இருந்தன. எவரும் இதனைக் கருத்திற் கொள்ளவில்லை.

கோயில் உட்பட மத தலங்கள் புனரமைப்புக்கு பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையர் தினத்துக்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே மதங்களுக்கு வேறுப்படுத்தப்பட்ட வகையில் சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம் - என்றார்.

# முத்துநகர் விவசாயிகள் பிரச்சினை பற்றி பிரதமர் அலுவலகத்தில் கலந்துரையாடல்

திருகோணமலை மாவட்டம் முத்துநகர் கிராமத்தைச் சேர்ந்த 351 குடும்பங்கள் தங்களது விவசாய நிலங்களை இழந்ததன் காரணமாக துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் இந்தப் பயிர் பருவத்துக்கான நெல் பயிரிடும் பணிகளும் தாமதமாகியுள்ளன.

இத்தகவல் தொடர்பாக அரசாங்கத்துடன் பலமுறை கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதுவரை தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை. சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு பிரதமர் விவசாயிகளைச் சந்தித்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தாலும், அதுவும் மேலும் தாமதமடைந்த நிலை காணப்படுகிறது.

இதனால் நேற்று கொழும்பில் முத்துநகர் விவசாயிகள் பிரதமர் செயலாளர் அலுவலகத்துடன் இணைந்து ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

அந்தச் சந்திப்பில் பிரதமர் அலுவலகம், இந்தப் பிரச்சினையில் தங்களது தலையீட்டை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தது. மேலும், விவசாயிகள் அங்கு நிலவும் சிக்கலான சூழ்நிலையையும், சில அரசியல்வாதிகள் மற்றும் நிறுவனங்கள் பொய்யான தகவல்களை வழங்கி விவசாய நிலங்களை அபகரிக்க முயல்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினர். அதேவேளை அவர்கள் தீர்வுக்கான சில யோசனைகளையும் முன்வைத்தனர்.

இதன் விளைவாக, அடுத்த 10 நாட்களுக்குள் திருகோணமலையில் அனைத்து தரப்பினரும் பங்கேற்கும் மற்றொரு கலந்துரையாடலை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

முத்துநகர் விவசாயிகள் ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரக போராட்டம் நேற்று(13) 58 ஆவது நாளாகவும் திருகோணமலையில் தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## உலகமயமாக்கலும் தமிழர் பண்பாடும்

மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் தங்களது வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்தே வாழ்ந்து வந்துள்ளனர். இந்த வகையில் உலகில் சிறந்ததாகவும், முதன்மையானதாகவும் தமிழர்களின் பண்பாடு காணப்படுகின்றது. ‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்’ என்ற ஆன்றோர் வாக்குக்கமைய ஒவ்வோர் மக்கட் கூட்டத்தினரும் தனித்துவ அடையாளமுள்ளவராகத் திகழ்வது பண்பாடாகும். எம்முடைய முன்னோர்கள் சிறந்த கலாசாரத்தையும் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்றி ஆரோக்கியமான ஒழுக்க நெறிமுறைகளுடனான வாழ்வையே வாழ்ந்துள்ளனர். தமிழர்களின் முக்கியமான அடையாளங்களில் ஒன்றாக அவர்களுடைய பண்பாடு விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று இந்தப் பண்பாடு, கலாசாரம் என்பன மிக மோசமான சவாலைச் சந்திக்கின்றன. தேசிய சந்தைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிலான அதிகரித்த அளவிலான எல்லை தாண்டிய வர்த்தகத்திலும் சர்வதேச மூலதனம், பணம் என்பவற்றின் அசைவுகளுக்கூடாகவும் தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கூடாகவும் இது இடம்பெற்று வருகின்றது.புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதாகவும், செலவு அனுகூலம் மற்றும் உயர் இலாபம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பொருளாதார நடவடிக்கைகள் தேசிய எல்லைகளைத் தாண்டி வியாபித்துச் செல்லும்போது பண்ட உற்பத்தி, வர்த்தகம் மற்றும் முதலீடு என்பன சர்வதேச மயமாக்கப்படுகின்றன.

நாம் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அறிவியல் நாளுக்கு நாள் வளர்ச்சி கண்டு வருகிறது. இதனால் இன்று உலகம் ஒரு சிறு கிராமமாக மாறி விட்டது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பேறாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசி மக்களிடையே உள்ள தூரத்தைக் குறைத்துவிட்டது. மின்னஞ்சல், இணையம், தொலைபேசி என்பவற்றின் மூலம் உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. இதுவும் தமிழர்களின் பண்பாட்டுச் சிதைவுக்கு ஒரு முக்கிய காரணமாகிவிட்டது.

’அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்;”

என்ற குறளின் மூலமாகத் திருவள்ளுவர் அறத்தின் வழி மாறுதலே தமிழர்களின் பண்பாடு எனச் சுட்டிக் காட்டுகின்றார். அதாவது பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் என்றும், அதுவே தமிழர்களின் பண்பாடு என்றும் திருவள்ளுவர் கூறுகிறார். இந்த அறநெறி, தனிமனித வாழ்க்கையையும்சமூகவாழ்க்கையையும்மேம்படுத்தவழிவகுக்கிறது. தமிழர்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தங்களுடைய பண்பாட்டில் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதனை சங்ககால இலக்கியங்கள் எமக்கு மிகவும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவை அக்கால மக்களின் வாழ்க்கை முறை, சமூக அமைப்பு போன்ற பல்வேறு அம்சங்களை நமக்கு எடுத்துரைக்கின்றன.

தொழில் மயமான நாடுகளில் வீட்டுச் சந்தையானது முதிர்ச்சியடையும் போது, சர்வதேச வளர்ச்சிக்கான தேவை அதிகரிக்கிறது. வெளிநாட்டுச் சந்தைகள் நீண்டகால விரிவாக்கத்திற்கு மிகவும் கணிசமான ஆற்றலை வழுங்குகின்றன. உலக மயமாக்கல் திட்டத்தின் வெற்றியானது உள்ளூர் நுகர்வோரின் விருப்புத் தேர்வுகள், தேவைகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்கு அதிக உணர்திறன் காரணமாகும். இலக்கு நாடுகளுக்கு உலகமயமாக்கல் புதிய போட்டியைக் கொண்டு வருகின்றது. இது உள்ளூர் வணிகங்களை அதிக போட்டித்தன்மையுடன் மாற்றுவதற்கு தூண்டுகிறது. இதன் விளைவாக பன்முகத்தன்மை, தயாரிப்பு படைப்பாற்றல், தரம் மற்றும் செலவு ஆகியவற்றை மேம்படுத்த உதவுகிறது.

உலகமயமாக்கல் என்ற எண்ணக்கருவின் தோற்றத்தினால் இன்று பண்பாட்டுத் தனித்துவம் மாற்றமடைந்து வருவதைக் காண்கிறோம். உலக மக்களிடையேயான தொடர்புகள் அதிகரித்து வருவதே இதற்குக் காரணமாகும். பண்பாட்டு நெறிமுறைகள் பேணப்படாது ’கண்டதே காட்சி கொண்டதே கோலம்’ என்ற நிலையில் இளைஞர்களும் இளம் பெண்களும் அலைகின்றனர். அதனால் ஒழுக்கக்கேடுகளும் தலைதூக்குகின்றன. இன்று உலகம் ஒரு பல்லினப் பண்பாட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் கீழைத் தேசப் பண்பாடுகளை அடிப்படைச் சிந்தனைகளாகக் கொண்டு வாழ்ந்த மக்கள் கலாசாரச் சிக்கல்கள் நிறைந்த மேலைத்தேய வாழ்க்கை நடைமுறைகளுக்குள் திடீரெனப்புகும்போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் அதிகமாகவே இருக்கும். இந்த நிலையில் உலகமயமாக்கலினால் உண்டாகும் தாக்கங்கள் ஒவ்வொரு சமூகக் குழுக்களையும் ஒரு பல்லினப் பண்பாட்டை நோக்கி இழுத்துச் செல்வதாகவே அமையும். சமூக, பொருளாதார நிலைகளில் மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். நவீன உலகில் இணைய வசதிகள், பண்பாட்டு ஊடகங்கள், இலத்தினியல் ஊடகங்கள் இளைஞர்களிடையே வேறுபட்ட கலாசார நுகர்விற்கும் பரவல்களுக்கும் உந்து சக்தியாக அமைகிறது.

எனவே உலகமயமாக்கலினால் நமது பண்பாடு சீர்குலைந்து விடக்கூடாது. குறிப்பாக மேலை நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்கள் நமது பண்பாட்டை பேணிக் காப்பவர்களாக விளங்க வேண்டும். நமது பண்பாட்டின தனித்துவத்தையும் பேணிப் பாதுகாத்து உலகத்தோடு ஒத்து வாழ்வோம்.

**அசோக்குமார் சயந்தினி**

உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

### அமைச்சரின் கருத்தால்

# எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மரிக்கார் எம்.பி. சபையில் பதற்றம்

எதிர்க்கட்சியின் உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் நடைபெற்ற இரகசிய கலந்துரையாடல் தொடர்பில் அமைச்சர் சமந்த வித்யாரத்ன ஊடங்களுக்கு குறிப்பிட்ட கருத்துக்களால் எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுங்களென ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் தலைமையில் 2025.10.31 அன்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் எதிர்கட்சியின் உறுப்பினர்கள் மாத்திரமே கலந்துகொண்டிருந்தனர். இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்காத பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமந்த வித்யாரத்ன இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையின் நிலையியற் கட்டளையின் பிரிவுக்கமைய, அமைச்சர் சமந்த வித்யாரத்னவின் கருத்தினால் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியின் உறுப்பினர்களின் பாதுகாப்புப் குறித்து பேசப்பட்ட விடயங்களை ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளதால் எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சிறப்புரிமை மீறல் குறித்து ஆராய்ந்து முறையான நடவடிக்கை எடுங்கள் என்று வலியுறுத்துகிறேன். இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது சமந்த வித்யாரத்ன தேவையாயின் சபாநாயகரிடம் சென்று கேளுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். நீங்கள் (சபாநாயகர்) அவருக்கு இரகசிய விடயங்களை குறிப்பிட்டதை போன்று அவர் தெரிவித்துள்ளார். சபாநாயகர் பெலவத்தை அலுவலகத்தின் சபாநாயகர் என்ற முத்திரையை நாங்கள் பதிக்கவில்லை. ஆளும் தரப்பினர்கள் தான் அவ்வாறான நிலையை ஏற்படுத்துகிறார்கள் - என்றார்.

### போதைப் பொருளுடன் கைதான

# இலங்கை மீனவர் 5 பேருக்கு மாலைதீவில் 30 நாள் தடுப்பு

மாலைத்தீவு கடற்பரப்பில் வைத்து மாலைத் தீவு பாதுகாப்புப் பிரிவினரால் 355 கிலோ கிராம் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 5 மீனவர்களை 30 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்த அந்த நாட்டுப் பாதுகாப்புப் பிரிவு தீர்மானித்துள்ளது.

மாலைத்தீவு கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த சந்தேகத்திற்கிடமான இலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப் படகொன்று மாலைத்தீவுப் பாதுகாப்புப் பிரிவினரால் நவம்பர் 7 போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தது.

இதன்போது படகில் பயணித்த 5 மீனவர்களும் கைதாகியிருந்தனர். கடற்படையினரால் மாலைத்தீவு பாதுகாப்பு பிரிவினருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் போதைப்பொருளுடன் பயணித்துக் கொண்டிருந்த அவிஷ்க புதா என்னும் இலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப் படகை அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினர் கைது செய்திருந்தனர்.

மீன்பிடி படகில் இருந்து மீட்கப்பட்ட 24 பொதிகளில் இருந்து 58 கிலோ 600 கிராம் ஹெரோயின் மற்றும் 297 கிலோ 300 கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக மாலைத்தீவு பாதுகாப்பு பிரிவு உறுதிப்படுத்தியிருந்தது.

இலங்கையைச் சேர்ந்த 28, 34, 39, 42 மற்றும் 63 வயதுடைய ஐந்து மீனவர்களே சம்பவம் தொடர்பில் கைதாகியிருந்தனர். இந்நிலையில் மீனவர்களை 30 நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைத்து விசாரணை செய்ய அந்நாட்டு பாதுகாப்பு பிரிவு தீர்மானித்துள்ளது.

சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காகவும் , அவர்களை அழைத்து வருவதற்காகவும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள் மற்றும் கடற்படை அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று மாலைத் தீவுக்கு பயணமாகியிருந்தது. மாலைத்தீவு பாதுகாப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை காரணமாக சந்தேகநபர்களை அழைத்துவர முடியாமல் போயுள்ளதுடன், மாலைதீவுக்குச் சென்றிருந்த அதிகாரிகள் குழுவும் மீள நாடு திரும்ப உள்ளது என கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கிரிந்தவில் கைதானோருக்கு 7 நாட்களுக்கு தடுப்புக் காவல்

கிரிந்த கடற்கரைப் பகுதியில் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை 7 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கைது நடவடிக்கையைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் புதன்கிழமை திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டிருந்தார்.

கிரிந்த அந்தகலவெல்ல கடற்கரை பகுதியில் மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவு அதிகாரிகளால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றின் போது கடற்கரையில் கயிறு ஒன்றின் உதவியுடன் மிதந்துக் கொண்டிருந்த நிலையில் 394 கோடி ரூபா பெறுமதி மிக்க 329 கிலோ கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

தென் மாகாண பொலிஸ் குழு மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பிரிவினருடன் இணைந்து மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகள் அதிகாலை ஒரு மணியளவில் சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்து போதைப்பொருள், கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் மற்றும் போதைப்பொருளை கொண்டு வந்திருந்த 7 சந்தேகநபர்களைக் கைது செய்திருந்தனர்.

இதன்போது சந்தேகநபர்கள் வருகைத் தந்திருந்த 7 வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் ஆழ்கடல் மீன்பிடி படகொன்றின் மூலம் கொண்டுவரப்பட்டு பின்னர் சிறிய மீன்பிடி படகொன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

குறித்த மீன்பிடிப் படகு கரையை அடைந்த நிலையில், படகிலிருந்த சந்தேகநபர் பொலிஸார் சுற்றிவளைப்பில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் தகவல் அறிந்ததை அடுத்து போதைப்பொருளை கயிற்றின் உதவியுடன் கடலில் எரிந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த போதைப்பொருள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பலைச் சேர்ந்த, துபாயில் மறைந்திருக்கும் திக்வெல்ல பகுதியை சேர்ந்த 'ரன் மல்லி' என்ற போதைப்பொருள் கடத்தல்காரருக்கு சொந்தமானது என தெரியவந்துள்ளது.கைதுநடவடிக்கையைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் நேற்று திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் சந்தேகநபர்களை 7 நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸாருக்கு அனுமதிவழங்கி நீதிவான் உத்தரவிட்டார்.

# லொக்கு பெட்டியின் சகாக்கள் ரூபா 26 லட்சத்துடன் மாட்டினர்

பிரபல போதைப்பொருள் வர்த்தகர் என அறியப்படும் 'லொக்கு பெட்டி' என அழைக்கப்படும் சுஜீவ ருவன் குமாரவின் சகாக்கள் இருவர் போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்டிருகடகலாம் என சந்தேகிக்கப்படும் 26 இலட்சம் ரூபா ரொக்கப் பணத்துடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி அளுத்கம பகுதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் வெளியேறு நடவடிக்கைக்கு அமைய ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவினர் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பெருமளவான பணத்துடன் சந்தேகநபர்கள் இருவரை கைதுசெய்திருந்தனர். குறித்த சந்தேகநபர்கள் பிரபல போதைப்பொருள் வர்த்தகர் என அறியப்படும் 'லொக்கு பெட்டி' என அழைக்கப்படும் சுஜீவ ருவன் குமாரவின் சகாக்கள் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

உரகஸ்மன்ஹந்தியா மற்றும் இந்துருவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 24 மற்றும் 27 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்களிடமிருந்து போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் 26 இலட்சம் ரூபா ரொக்கப் பணம், மோட்டார் சைக்கிள் மற்றும் 2 கையடக்கத் தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன. கைதான நபர்கள் நீண்ட காலமாக ஈசி கேஸ் முறை மூலம் போதைப்பொருளை விற்பனை செய்து வந்துள்ளது என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களின் வங்கி கணக்கு தொடர்பான விவரங்கள் மற்றும் தொலைபேசிப் பதிவுகளை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றைக் கொண்டு விசாரணைகளை முன்னெடுக்க உள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர். மேலும் விசப் போதைப்பொருள் சட்டத்தின் 54 (எ) சரத்து மற்றும் கறுப்புப் பணம் சுத்திகரிப்பு தடுப்பு சட்டத்துக்கமைய 'லொக்கு பெட்டி' என அழைக்கப்படும் சுஜீவ ருவன் குமார மற்றும் அவரது ஆதரவாளரான தேவாலய பூசகர் ஒருவரும் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பௌத்தத்திற்கு மட்டும் அதிகளவு நிதி ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

## ஆளும்தரப்பு, எதிர்த் தரப்பை சேர்த்து விமர்சித்த கோடீஸ்வரன்

வரவு, செலவுத் திட்டத்தில் புத்தசாசன அமைச்சுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மதங்கள் மற்றும் இனங்கள் தொடர்பில் ஆளும்தரப்பு ஒருதலைப்பட்சமாகவே செயற்படுகின்றது. இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். எதிர்க்கட்சித் தலைவரும் பௌத்த மதத்துக்கு மாத்திரமே முன்னுரிமை கொடுக்கிறார். இவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த வரவு செலவுத் திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு இணங்கச் செய்யப்பட்ட ஒன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

பல்வேறு நிபந்தனைகளுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் முதலீட்டை மையப்படுத்தி செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டமாக நாங்கள் இதனைப் பார்க்கின்றோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார விடயங்களுக்கு அதிகளவான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறைக்கு மொத்த செலவீனத்தில் 12.5 வீத நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 82 தள வைத்தியசாலைகளுக்கு 31 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்குக் கூடுதலான பங்குகளை செலவழிக்க வேண்டும்.

இந்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தின்போது இந்த வைத்தியசாலைக்கான கட்டடங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். இதன்படி அந்த வைத்தியசாலையைப் பார்வையிட்ட அமைச்சர் அங்கே நான்கு மாடிக் கட்டடத்திற்கு நிதியை ஒதுக்கியுள்ளதாகக் கூறியுள்ளார். இதற்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

போக்குவரத்துத் துறையில் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் கிராமிய வீதிகள் பல புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. அலிகம்பை, திருக்கோவில், நாவிதன்வெளி ஆகிய பிரதேச வீதிகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றேன்.

அத்துடன் நீர்ப்பாசன துறைக்கும் அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த மாவட்டத்தில் இருந்து 20 வீத நெல் உற்பத்தி கிடைக்கின்றது.

இதனால் ஒருங்கிணைந்த நீர்ப்பாசன திட்டத்தை வலுப்படுத்துவது அவசியமாகும். இதன்மூலம் மேலதிகமாக 10 வீத நெல் உற்பத்தியை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும்.

அதேபோன்று நன்மையான விடயங்கள் வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடங்கப்பட்டிருந்தாலும் கல்விக்காக மொத்த ஒதுக்கீட்டில் 6.1 வீதமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அபிவிருத்தியடைந்த நாடுகளில் 10 முதல் 20 வீதம் வரையில் ஒதுக்கப்படும்.

இதனால் இங்கே கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மிகக் குறைவாக இருக்கின்றது. இதனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகள் புதிய கண்டுபிடிப்புகள், புதிய ஆராய்ச்சிகளுக்காக அதிகளவான நிதியை ஒதுக்குகின்றன. ஆனால் இங்கே வரவு செலவுத் திட்டத்தில் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இதனால் ஆளும்தரப்பு இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகின்றோம்.

இதேவேளை புத்த சாசன கலாசார அமைச்சு



ஆளும்தரப்பில் இருக்கின்ற மிகப்பெரிய தவறாக இருக்கின்றது. இந்த ஆளும்தரப்பு இடதுசாரியாகும். சமத்துவத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கூறுகின்றது. இனம், மதங்களுக்கு சமத்துவம் என்றும் கூறுகின்றது. ஆனால் பௌத்தசாசன அமைச்சு என்ற அமைச்சை வைத்துள்ளது. இதில் இந்து கலாச்சார அமைச்சு, இஸ்லாம் கலாச்சார அமைச்சு மற்றும் கிறிஸ்தவ கலாச்சார அமைச்சு உள்வாங்கப்படவில்லை. இதில் இருந்தே ஆளும்தரப்பு ஒருதலைப் பட்சமாகச் செயற்படுகின்றது என்பது தெரிகிறது. இதனை கண்டிக்க வேண்டியதாக இருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவரும் பௌத்த சாசன அமைச்சுக்கு என்ன முன்னுரிமை கொடுத்துள்ளீர்கள் என்று கேட்கின்றார். இவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்.

ஆளுங்கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் உங்களின் மதம் சார்ந்து சிந்திப்பவர்களாகவே இருக்கின்றீர்கள். தனியாகப் பௌத்த அமைச்சை உருவாக்கியுள்ளீர்கள். ஏனைய மதங்கள், மொழிகள் மற்றும் இனங்களுக்கான அமைச்சு உருவாக்கப்படவில்லை - என்றார்.

# உழைத்துக் கொடுத்த மக்கள் கூட்டத்தின் சம்பள உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காதீர்

## நாடாளுமன்றத்தில் திகாம்பரம் உருக்கம்



பெருந்தோட்ட மக்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு வழங்கியுள்ளதை போன்று காணி பிரச்சினைக்கும் அரசுத் தலைவர் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். மக்களின் வரிப்பணத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு சம்பளம் வழங்குவதை எதிர்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் நிசாம் காரியப்பர் எதிர்க்கிறார்கள். பெருந்தோட்ட மக்கள் இந்த நாட்டுக்கு உழைத்துக் கொடுத்துள்ளார்கள். கடந்த காலங்களில் வழங்க முடியாத சம்பள அதிகரிப்பை இந்த ஆளும்தரப்பு வழங்குகிறது. அதற்கு இடையூறு விளைவிக்காதீர்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஆளும்தரப்பு பெருந்தோட்ட மக்களுக்கு 1,750 ரூபா சம்பளத்தை வழங்குவதாக அறிவித்துள்ளது. பெருந்தோட்ட கம்பனிகள் ஊடாக 200 பெற்றுக்கொள்வதற்கும், ஆளும்தரப்பு 200 ரூபா வழங்குவதற்கும் நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் இது வரவேற்கத்தக்கது.

பெருந்தோட்ட மக்களுக்கு ஆளும்தரப்பின் ஊடாகச் சம்பள உயர்வை வழங்க உரிய நடவடிக்கைகளை நல்லாட்சி ஆளும்தரப்பில் மேற்கொண்டோம். இருப்பினும் அந்த முயற்சிகள் வெற்றிப்பெறவில்லை. இந்த ஆளும்தரப்பு தற்போது 200 ரூபா வழங்க தீர்மானித்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்தினால் சிறந்ததாக அமையும்.

இந்தச் சம்பள அதிகரிப்பு வருகை அடிப்படையில் வழங்காமல் அடிப்படை சம்பளமாக அதிகரித்திருந்தால் மக்கள் கொண்டாடியிருப்பார்கள். இந்த 200 ரூபா வழங்கல் 2026 ஆம் ஆண்டுக்கு மாத்திரமா அல்லது தொடர்ச்சியாக வழங்கப்படுமா என்பதை ஆளும்தரப்பு தெளிவுப்படுத்த வேண்டும்.

பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஆளும்தரப்பு சிறந்த திட்டங்களை மேற்கொண்டால் நாங்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். இருப்பினும் பெருந்தோட்ட அபிவிருத்தி மற்றும் இந்தச் சம்பள வழங்கல் தொடர்ச்சியாகக் கிடைக்குமா என்பதையும் ஆளும்தரப்பு தெளிவுப்படுத்தவேண்டும்.

பெருந்தோட்டத்தொழிற்துறை அழிவடையும் நிலையில் உள்ளது. ஆகவே இந்தத் தொழிற்துறையை மறுசீரமைத்து பாதுகாப்பதற்கு ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். பெருந்தோட்டக் காணிகளை மலையக மக்களுக்குப் பிரித்து வழங்கி அவர்களைச் சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதே இதற்குச் சிறந்த தீர்வாக அமையும்.

ஆளும்தரப்பில் உள்ள மலையக பிரதிநிதிகள் பேச்சளவில் மாத்திரம் அரசியல் செய்யாது, அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளவேண்டும். மலையகப் பிரதிநிதிகள் பதவி விலகவேண்டும் என்று இன்று குறிப்பிடும் மலையகப் பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளை அமைக்கும்போது ஒன்றிணைந்து செயற்பட்டார்கள்.

பெருந்தோட்ட மக்களின் காணி பிரச்சினைக்கும் ஆளும்தரப்பு தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். மக்களின் வரிப்பணத்தில் பெருந்தோட்ட மக்களுக்குச்சம்பளம்வழங்குவதைநாடாளுமன்றஉறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் நிசாம் காரியப்பர் எதிர்க்கிறார்கள். பெருந்தோட்ட மக்கள் இந்த நாட்டுக்கு உழைத்துக் கொடுத்துள்ளார்கள். கடந்த காலங்களில் வழங்க முடியாத சம்பள அதிகரிப்பை இந்த ஆளும்தரப்பு வழங்குகிறது. அதற்கு இடையூறு விளைவிக்காதீர்கள் - என்றார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2025இல் வெளியிடப்பெற்றது